பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜூலை 2020



## மீண்டும் பிறப்பெடுக்கும் சங்ககாலம்

### கவிதாமண்டலம் பொற்கைப்பாண்டியன்

நேர்காணல்...

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | ஜூலை 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## புதிய வெளியீடு ...




இந்நூல் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்...

முனைவர் ம. தமிழ்ச்செல்வி

e-mail :
tamilselvisathiskumar@gmail.com

# தமிழ்நெஞ்சம் பேசுகிறது...



அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

கொரோனாவால் உலகமே திடீர் பாதிப்புக் குள்ளாகி இருக்கிறது. எல்லாம் தலைகீழாகிவிட்டது. தினசரி மனித வாழ்வு மாறிப் போய் கிடக்கிறது. இந்தக் கால கட்டத்தில். தொடாத மனிதம் தேவைப்படுகிறது..

வல்லரசாம் அமெரிக்காவை நிறவெறி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அதுவே தொடர்ச்சியாக ஐரோப்பாவையும் சிதைத்துக் கொண்டிருக்கிறது. பல நாடுகளைக் கடந்து உலகெங்கும் வியாபித்திருக்கும் இன, மத, மொழி மற்றும் நிறவெறியானது இன்று நேற்றல்ல, தொன்று தொட்டே மனித மனங்களை ஆக்கிரமித்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டு வருகிறது. இதற்கு அடிப்படைக் காரணமே சக மனிதனைப் பற்றிய புரிந்துணர்வின்மையே!

நம்மை நாமே நேசிப்பது போல், சக மனிதரையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளும்போதுதான், இவ்வனைத்துப் பாகுபாடுகளும் களைந்தெறியப்பட்டு, இவ்வுலகமே அமைதிப் பூங்காவாகத் திகழுமென்பதில் ஐயமில்லை.

தனிமனித முயற்சிகளும் நல்ல செயல்பாடுகளும் அயலாரையும் அணிசேர்த்துக் கொள்ளும்போதுதான் பெரிய மாறுதலை ஏற்படுத்தி உலகை அமைதியாக வழி நடத்த, அதுவே உந்துகோலாய் அமையும்.

மனிதப் பேதங்களைத் தீயிட்டுக் கொளுத்தி, அன்புச் சுடரேற்றி அகிலத்தை அழகாக்குவோம். மனித மனங்களை வாசிப்போம்; உயிராக நேசிப்போம். அதன் மூலம் கிடைக்கும் அமைதிக்காற்றைச் சுதந்திரமாக சுவாசிப்போம்.

இருப்பதே ஓர் உயிர், இறப்பதோ ஓர் முறை. அதற்குள் நல்லதை செய்து நலம் பெற வாழ்வில் சிறப்போம். கொரோனாவை ஒழிப்போம்; கொடுந்துயரைக் களைவோம். நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்



# தன்முனை
## கவிதைகள்

தேனும் இருக்கும்
தேள் கொடுக்கும்
இருக்கும் மனிதனின்
எலும்பில்லா நாக்கு..!

**த. ரவீந்திரன்**, திருச்செங்கோடு

●

கலாச்சார மொழிதலோடு
கைகுலுக்கும் கவிதைகள்
காற்றில் பயணிக்கும்
ஊர்வலத்தோடு சொற்கள்

**கா.ந.கல்யாணசுந்தரம்**

●

முத்தமிட்டு நகர்ந்ததும்
அழகாக தலையாட்டுகிறது
செடியில் பூத்த
பறிக்காத மலர்

**சாண்டில்யன் விவேகானந்தன்**

●

வார்த்தைகளை விட
வலிமையானது மௌனமே
இல்லற வாழ்வின்
முரணான பொழுதுகளில்...

**ஐ.தர்மசிங்**

●

கனவுக்குள் அவளோடு
எனக்கு கைகலப்பு
முகமூடிக்குள் முகம்
புதைத்தே வந்ததால்...

**மகேந்திரன் நீதி**

●

# ஹைக்கூ

வானும் மண்ணும்
இணைந்து தாலாட்டுகிறது
நிற்கும் புத்தரை

●

விடியும் வானம்
பனிப்பூக்களைப் பொழிகிறது
அருள் வழங்கும் புத்தரின்மேல்

●

உறங்கும் உலகு
கையால் எழுப்புகிறார்
அருள் வழங்கும் புத்தர்

●

அதிகப்படுத்தும் பாடச்சுமை
அமிழ்த்திவிடுகிறது
குழந்தையின் எண்ணச்சிறகுகளை

●

மரங்களின் நிழல்
அந்தப்பாதையைக் கடக்க
ஓர் ஏணியை வரைந்திருக்கிறது

●

இலைகளற்ற மரம்
வானத்தில் படர்ந்திருக்கிறது
மின்னலாய்

●

வானம் பார்க்கிறது
பூமியில் முழுநேர முழுநிலவு
குழந்தை

●

**சா.கா.பாரதி ராஜா**

# பெண்ணின் அகவெளியும் புறவெளியும்

**முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி**
புதுச்சேரி.

இருபத்தோராம் நூற்றாண்டு தொடக்கம் , அறிவியல் தொழில்நுட்பங்கள் நம்மிடையே எத்தனையோ மாறுதல்களை, வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. இந்த மாறுதல்களை முன்வைத்து நாம் எளிதான வாழ்க்கை வாழத் தலைப்பட்டிருக்க வேண்டும். மாறாக சிக்கலான வாழ்க்கைக்குள் இன்னும் சுழன்று கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

காரணம் எதுவாயினும் நம்முள் திணிக்கப்பட்டுள்ள அல்லது நாமாகவே ஏற்றுக்கொண்டுள்ளநுகர்வுக்கலாச்சாரமே. இந்த நுகர்வு கலாச்சாரமானது பெண்ணின் அகப்புற வெளிகளை பரந்துபட்ட அளவில் பாதித்திருக்கிறது. அதன் உண்மைத்தன்மையைபெண்வாழ்வியலின் மூலம் கூர்ந்துணரமுடிந்திருப்பதை விளக்குவதே இக்கட்டுரை.

இது தொழில்நுட்பக் காலம். இக்காலம் பெண்களுக்கு உரிய வாழ்வியலில் பல மாற்றங்களைக் கொடுத்திருக்கிறது. வீடு, சமையல், குழந்தைகள் பராமரிப்பு என மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது புதுமையும்வேலைபளுவிலிருந்துமீளுதலும் நடந்திருக்கிறது. மேலும் பெண்கள் தன்னை, தன்குடும்பம் பற்றிய கூடுதலான புரிதல்களோடு வாழத்தொடங்கியுள்ளனர்.

இந்தப் புரிதல்களோடு சமூகம், கல்வி, பொருளியல், அரசியல் போன்ற



பொதுத்தளங்களை ஒரு புள்ளியிலிருந்து தேடத் தொடங்கியுள்ளனர். இந்தப் புள்ளி தான் பெண்ணில் சுருங்கிக் கிடந்த அகவெளியையும் புறவெளியையும் விரியச் செய்திருக்கின்றன. அதுதான் பெண்ணின் எல்லையற்ற பண்பை யும், திடமான ஆளுமையையும் நிர்வகிக்கத் தொடங்கியுள்ளது.

'பெண்ணின் பெருந்தகை யாவுள' என்பதற்கேற்ப பெண்ணின் அகவெளி தன்னிலிருந்து தொடங்கி, குடும்பம் , உறவு, சமூகம் என விரியத் தொடங்கியிருக்கிறது. மேலும் அது மாநிலம், நாடு, உலகமெனவும் விரிவடைந்து கடந்து செல்வதை உணர முடிகிறது. ஆம், பெண்கள் இப்போது குடும்பம் என்ற கட்டுத்தளையிலிருந்து விடுபடவும், உலகைப் பற்றிப் பேச வும் முயல்கின்றனர். ஈராயிரம் ஆண்டு களாகப் பேசப்படாததாக இருந்த பொருளை யெலாம் வெளிப்படையாக பேசத் துணிந் திருப்பது அவர்களின் அகவெளி விரிந்து வருவதை காட்டுகிறது.

ஆனால் இன்று சினிமா காட்சிகள், சின்னத்திரை தொடர்நாடகங்கள், பட்டிமன்ற கலாய்ப்புகள் எனச் சில ஊடகப்பதிவுகள் பெண்பற்றிய பிம்பத்தை மிகைப்படுத்திக் காட்டுகின்றன. இவை பெண் மனதை நஞ்சாக்குகின்ற வித்தைகளைச் செய்து கொண்டிருப்பதும் கண்டிக்கத்தக்கது. மற்றொரு புறமாக இந்தச் சமூக ஊடகங்கள் பெண்ணை ஆளுமை நிறைந்தவளாகக் காட்டவும் தயங்கவில்லை. குறிப்பாக வாணிகநோக்கில் வரும் விளம்பரங்களில் பெண்களின் தற்சார்பு நிலையை எடுத்துக் காட்டி விளம்பரப்படுத்துவது வரவேற்கத் தக்கதும்கூட.



பெண்ணியம் செல்வக்குமாரி

இன்றும் நடந்து வரும் பல நிகழ்வுகள் பெண் வாழ்வின் மீதான நம்பிக்கையைக் குலைத்தாலும், நிறைய படிப்பினைகளை அவைகள் சொல்லித் தரவும் தயங்கவில்லை. யதார்த்த உலகில் நிகழும் நிகழ்வுகளைக் கண்டு, இன்பத்துன்பங்களை எதிர் கொண்டு தாங்குகின்ற திடமான மனோசக்தி பெண்களிடையே உருவாகி வருவதற்குக் காரணம் பொதுவெளியை அறிந்து கொள்ள முற்பட்டதுதான். அதற்கு மாறாகவும் பெண்கள் புரிதலில்லா விடுபாட்டுணர்வால் தங்களைத் தாங்களே எதிர் உயிரிடம் மாட்டிக் கொள்ளவும் நேர்ந்துவிடுகிறது. பெண்ணுக்கு நிக ழும் பாலியல் வன்கொடுமை பெண் அகவெளியை உள்ளுக்குள் இழுத்துச் சுருக்கிக் கொள்வதான வேலையைச் செய்கின்றன.இருந்தபோதிலும் எதையும் துணிச்சலுடன் அணுகும் திறனையும், வெளிப்படுத்தும் முறைமையும் ஒரு பெண்ணின் தனித்திறனை வெளிப்படுத்தும் வேலையையும் புறவெளி செய்கின்றன. இருவேறுபட்ட சாத்தியங்களை நிகழ்த்தும் முக்கிய காரணியாகத் திகழ்வது சமூக ஊடகங்களே.

அனைத்து உயிர்களுக்கும் பொது வானவையாக விளங்குவது உண்ணலும் உறங்குவதுமாம். இதன்மூலம் ஒவ்வொரு உயிரும் தன்னைப் புதுப்பித்துக் கொள் கின்றன. இப்பொதுவிதி பெண் மக்களுக்கும் பொருந்தியிருக்க வேண்டும். இதுவரையில் பெண்கள் தங்கள் குடும்பத்திற்காக இவ் விரு செயல்பாடுகளில் அதிக அக்கறை

செலுத்தாதவர்களாக இருந்து வந்தனர். ஆனால் இன்றுதொழில்நுட்ப வசதிகள் தலைகீழ் மாற்றத்தை அவர்களுக்குள் உருவாக்கியிருக்கிறது. அதாவது உண்ணு தல், உறங்குதலைத் தன் குடும்பத்திற்காக தியாகம் செய்து கொள்வதற்கு மாறாக அவற்றில் அக்கறை செலுத்துபவர்களாகத் திரும்பியுள்ளனர். எவ்வுணவு சத்துள்ள உணவு? நலவாழ்வுக்கான உணவு எது?

புலனத்தில், தொலைக்காட்சிகளில் அறிந்தும், நலவாழ்வு குறித்த புத்தகங் களைத் தேடி வாங்கிப் படிக்கும் பழக்கம் உருவாகியுள்ளது. மேலும்தன் குடும்பத்தில் தனக்கான இடத்தைத் தெளிவுற அறிந்து அதற்கேற்றாற்போன்று கடமைகளைச் செய்து வாழத் தொடங்கியுள்ளனர். தன் உடல்நிலை குறித்தும் உடல்நலம் குறித்தும் உணர்ந்த நிலையில், தன்மீதும் அக்கறை செலுத்துபவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றனர். இந்த மாறுதல் சமூகவெளியில் பல நல்ல மாறுதல்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

பெண்களுக்குக் குடும்பம் கூண் டாக இருந்து வந்த நிலையில், குடும்பம் தற்பொழுது வெளி நிறைந்த கூடாக மாறத் தொடங்கியிருக்கிறது. குடும்பத்தின் அனைத்துச் சுமைகளையும்தான் ஒருத்தியே சுமந்த நிலையில், குடும்ப அங்கத்தினர் அனைவரும் பகிர்ந்து கொள்வது ஆரோக்கியமான நடவடிக்கைகள் ஆகும். அதாவது குடும்பத்தின் வேலை ஒருவர் தலைமீதே ஏற்றப்பட்டதில்லாமல், வேலை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. கணவன், மனைவி, மகன், மகள் என குடும்ப அங்கத்தினர் பலரும் வேலையைப் பகிர்ந்து கொள்வதனால் பெண்ணின் பணிச்சுமை குறைந்துவிடுகிறது. தொழில் நுட்பக் கருவிகள் சுலபமாக்கிவிட்ட வேலை, குடும்பத்தினர் சுலபமாக பகிர்ந்து கொண்ட வேலையிலிருந்து பெண் சற்றே இளைப்பாறத் தொடங்கி யிருக்கிறாள். இப்பொழுது குடும்பத்திற்கு

## மூன்றாம் பாலினம்

இருபாலும் இல்லாத
மூன்றாவது பாலினம்...!

ஆணுக்கான அடைமொழியாம்
திரு_வை ஏற்று ஜனித்த
திருநங்கைகள் இவர்கள்....!

கேலிக்கு ஆளாகும்
கேள்விக்குரியவர்கள்...!?
படைத்தவனின் பார்வையில்
பட்டுத் தெறித்த
ஒளிச்சேர்க்கைகள்...!

மானுடப் படைப்பில்
மாறுபட்ட படைப்பிது ...!
அர்த்தநாரியாய் வாழ்ந்து
அனாதையாக திரிபவர்கள்...?!
பிறந்த குடும்பம்
இவர்களை தள்ளி வைத்து
காயப்படுத்தியிருக்கிறது....!

வில்லாளன் விஜயனும்
இவர்கள் பின்
ஒளிந்தவன் தான்...!
இதிகாச காலந்தொட்டே
இருந்துகொண்டிருப்பவர்கள்....!

ஒப்பனைக் கலையை
மங்கையர் கூட இந்த
நங்கையரிடம்
கற்க வேண்டும்...!

இவர்களுக்கான
அங்கீகாரம்
இப்பொழுது தான்
அடையாளப் படுத்தப்பட்டது ...!

வசை பாடாமல்
வாழ்த்த கற்றுக்கொள்ளுங்கள்...
அவர்கள் வாழ்த்தினால்
நாமும் வாழ்வோம்...!
இவர்களும்
நம்மில் ஒருவரே...!!

**- அனுராஜ்**

தான் உழைக்கும் நேரம் குறைந்தும் வரையறுக்கவும் முடிகிற காரணத்தால், பெண்கள் புறவெளியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என்பது சமூக மாற்றத்தின் அறிகுறியாகத் தென்படுகிறது.

பெண்கள் இயல்பிலேயே மிகை உணர்ச்சிக்கு ஆட்பட்டவர்கள் எனச் சிலர் கருதும் மனப்போக்கு இருந்துவருகிறது. அதிகமாக கோபப்படுவது, துயரப்படுவது, சிரிப்பது போன்ற ஒன்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவர்கள் பெண்களே என்ற தவறுதலான மனோபாவத்தின் கட்டுகளை உடைத்திருக்கின்றனர். 'பொம்பள சிரிச்சா போச்சு,புகையிலைவிரிச்சாபோச்சு'எனவும் 'சீறும் பாம்பை நம்பு, சிரிக்கும் பெண்ணை நம்பாதே' என்ற சொலவடைகள் தவிடுப் பொடியாகும் அளவிற்குப் பெண் கள் இன்று சிறந்த ஆளுமைகளாக விளங்குகின்றனர். அதீத கனவுகளையும் கற்பனைகளையும் சுமந்தவர்களாகப் பிம்பப்படுத்தப்பட்ட பெண்மை, யதார்த்த உலகை அலசி ஆராய்கிறது. மிகைப்படுத்தப்பட்ட வாதங்களைப் புறம் தள்ளி, தன்னை ஒரு நெம்புகோலாக்கி, இவ்வுலகை ஒரு புள்ளியிலிருந்து இயக்கத் தொடங்கியுள்ளது.

அந்தப் புள்ளியின் தொடக்கம் 1917 மார்சு 8 ஆக இருந்திருக்க வேண்டும். அன்றுதான் பெண் தொழிலாளர்கள் தம் உரிமைக்காக குரல் கொடுத்தனர். ஆனால் தாய் கிளாரா ஜெரின் தலைமையில் எழுத்துப்பூர்வமாக தீர்மானம் நிறைவேறப்பட்டு முன்மொழியப்பட்ட தினம் 1910."அனைத்துதேசியஇனங்களைச்சார்ந்த பெண்கள் இத்தினத்தைத் தனிச்சிறப்பான தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என முன்மொழிந்தார். 110 ஆண்டுகள் கடந்தபின்னர் பெண்கள் வாழ்வில் பல மாறுதல்களை இத்தினம் ஏற்படுத்தியுள்ளது. இவ்வுலகில் நிகழும் நல்லது கெட்டதை ஆராய்ந்தறிந்தும், துன்பத்துயரங்களைத் தாங்கியும், அதை எதிர் கொண்டு வழிபடுத்தும் நேர்த்தியையும் இந்நாள் பெண்களுக்குக் கையளித்திருக்கிறதுதான்.

"எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை'' என்பதை ஆண் மக்கள் பொதுவாக உணர்ந் திருக்கின்றனர். ஆண்மக்கள் பொது வாக தன்வயப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தனர். இன்று அந்நிலை மாறியிருக்கிறது. பெண்களைப் புரிந்து கொள்ளவும் பெண்களின் வேலை பளுவைப் பகிர்ந்து கொள்ளவும் ஆரம்பித்துவிட்டனர். கண்களும் ஒளியும் போல குடும்பத்தில் ஆண்பெண்களின் நிலைப்பாடு இருந்துவரும் நிலையில், பெண்களும் பொதுவெளிக்கு வர ஆரம்பித்திருக்கிறார்கள். அகவெளியில் பெண்கள் பற்றியும் பொதுப்பிரச்சனைகளை அலசி ஆராய்கின்றனர்.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' 'பெண்கள் அரசியலுக்கு வந்தால் குடும்பத்தை யார் பார்த்துக் கொள்வது' கரண்டிப் பிடிக்கப் பிறந்தவர் களால் அரசியலைப் பிடிக்கத் தெரியுமா' என்பது போன்ற பல கேள்விகள் பெண்கள் மீது ஈட்டிகளாய்ப் பாய்ந்தது ஒரு காலம். இப்போது ''பெண்களே வெளியே வாருங்கள், அரசியல் படியுங்கள், ஆட்சி செய்யுங்கள்'' என்று பொதுவெளிச் சமூகம் அழைத்துக்கொண்டிருக்கும் காலம் இது.

மிகச் சமீபத்தில் "பெண்" என்ற ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டுள்ளது. நர்மதா பேராசிரியைத் தலைமையில் முழுக்க முழுக்க தமிழகத்தின் சிறந்த பெண் ஆளுமைகளால் நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டம் அது. ஆண்டாள் பிரியதர்சினி, கவிஞர் விசயலட்சுமி, குழந்தை நலக் காப்பாளர் லதா, பெண்ணியம் செல்வக்குமாரி, மனுசி போன்ற பெண் ஆளுமைகள் எழுபதுக்கும் மேற்பட்டோர் கூடிப பேசி பல முக்கிய முன்முடிவுகள் எடுக்கப்பட்ட கூட்டம் அது. குறிப்பாக பெண்கள் சமூக நடவடிக்கைகளில்

பங்கேற்கவும், அரசியல் பேசவும், ஆட்சி அதிகாரம் பற்றிய விவாதங்களை மேற்கொள்ளவும் பொதுவெளிக்குப் பெண்கள் வரவும் ஆகிய முக்கிய முடிவுகள் விவாதிக்கப்பட்டன. தொடர்ந்து பெண் அமைப்பு, ஒரு ஸ்திரத்தன்மையோடு செயல்படும் அளவிற்கு தன்னை வளர்த்துக் கொள்ளும். இதுபோன்ற பெண்ணமைப்புகள் தமிழகமெங்கும் தன் கிளைகளை விரித்துப் பயணப்படும்.

கிராமங்களில் பெண்கள், சுய உதவி குழுக்களின் வரவுக்குப் பின்னர் பொதுவெளியில் தன்னை இணைத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். "கிராமப்புறப் பெண்களை மேம்படுத்து வோம்" என்ற முழக்கத்தை ஐ .நா சபை (2012) அறிவிப்பு செய்தது. கிராமப்புறங்களில் பல நடவடிக்கைகள் அதன்மூலம் மேற்கொள்ளப்பட்டன. பெண்களைப் பொது வெளிக்குக் கொண்டுவரும் முயற்சியில் தன்னார்வ தொண்டு அமைப்புகளின் சேவை உண்மையில் மேம்பட்டது. நகர்ப்புறப் பெண்கள் போன்று கிராமத்துப் பெண்களுக்கும் பலவித விழிப்புணர்வு வந்திருப்பதை ஆரோக்கியமான ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு அரசியல் தெரியாது, ஈடுபாடுகிடையாது,அதுஅவசியமில்லாதது எனும் மனப்போக்கு மறைந்து வருவதைக் காண்கிறோம். பெண்கள் அரசியலை வழிநடத்துபவர்களாகவும், ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுபவராகவும், கட்சி அரசியலில் ஆலோசனை வழங்குபவர்களாகவும் தேறி வருவது மகிழ்ச்சியூட்டுகிறது.

பொதுவெளியில் பெண்கள் சமூக அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் துணிந்துவிட்டனர். பல மக்கள் போராட்டங் களை முன்னெடுத்துச் செல்கின்றனர். கல்வியில், வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு பெறுகின்றனர். என்றபோதும் சமூகத்தில் பெண்ணுக்கான இடம் இன்னும் சம

# ஹைக்கூ

தற்கொலைக்கு முயன்றவரை
ஓடிப்போய் பிடித்தார்கள்,
கைப்பேசியில் படம்

- அன்ஸார் எம்.எல்.எம்.

நிலையில் இல்லை என்ற உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியலில், கல்வியில், பொருளியலில் எத்தனைதான் முன்னேற்றம் அடைந்தாலும் பெண்கள் தாம் சார்ந்த சமூகத்தில் 'பெண்' என்பதால் முடக்கப்பட்டுவிடும் சூழல் இன்றுவரை உள்ளது. அதைமீறி முன்னர் கட்டமைக்கப்பட்ட பெண் பற்றிய பிம்பம் கட்டுடைக்கப்பட்ட புள்ளியிலிருந்துதான் செயல்படத் தொடங்கியுள்ளனர். பெண் தன் உரிமைக்கானப் படிக்கட்டில் ஒரு படியெடுத்து வைத்துவிட்டாள். இன்னும் பல படிக்கட்டுகள் அவள் ஏறக் காத்திருக்கின்றன. மலை உச்சி ஒன்றே அவள் அடையும் இலக்கு என்பதாக காலம் சிறுவெளிச்சத்தைப் பாய்ச்சியிருக்கிறது. பெண் ஒளிதான் என்பதை இவ்வுலகுக்குக் காட்டும் காலம் வெகுதாரத்தில் இல்லை.

"பெண் அறிவே மண்ணறிவு
பெண் கல்வியே குடும்பக் கல்வி
பெண் விடுதலையே சமூகவிடுதலை".

என்பதை இருபால் இனத்தாரும் புரிந்து கொள்ளும்நாளில்தான்பெண்ணின்இருப்பும் இயல்பும் விடுதலையுடையதாய் அமையும். அப்போதுதான் பெண்ணின் அகவெளியும் புறவெளியும் சமன்மையுடையதாகி இவ் வுலகை சமநிலையில் வைத்திருக்க ஏதுவாகும். ■



# பொற்கைப்பாண்டியன் கவித

## நேர்காணல்

நேர்கண்டவர் : **இராம வேல்முருகன்**

# மீண்டும் பிறப்பெடுக்கும்

பாரதிக்குப்பிறகு தற்போது கவிதாமண்டலம் என்ற பெயரில் ஒரு அமைப்பினை வைத்து சங்க காலக் கவிஞர்களைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் ஒரு மாபெரும் கவிஞர்; தமிழையும் கவிதையையும் தனது இரு கண்களாகக் கொண்டு செயல்படும் ஒரு தன்மானத் தமிழன்; மதுரையின் வீதிகளில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு கவிதை வேள்வியை நடத்தி வருபவர். சோழமன்னனின் பெயரை இயற்பெயராகவும் பாண்டிய மன்னனின் பெயரைப் புனைப்பெயராகவும் சேரமன்னனைப்போல் நம் தாய் கண்ணகியைப் போற்றிப் பாடும் கவிஞர் ஐயா பொற்கைப் பாண்டியன் அவர்களின் யதார்த்தமான நேர்காணலுக்கு வருவோம்.

■ பாரதியாருக்குப் பிறகு வேறு யாராவது கவிதா மண்டலம் என்று அமைத்து கவிதையை, கவிஞர்களை வளர்த்தது உண்டா? தாங்கள் பொற்கைப் பாண்டியன் கவிதா மண்டலம் என்று தங்கள் அமைப்புக்குப் பெயர் வைக்கக் காரணம் என்ன?

● கவிதாமண்டலம் பற்றிக் கேட்டீர்கள். மிக்க மகிழ்ச்சி. பாவேந்தரைப்பற்றி பாரதியார் சொல்கையில் ஸ்ரீ சுப்ரமணியபாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்பு ரத்தினம் என்று சொல்லியிருக்கிறார். அதைத் தொடர்ந்து பாரதிதாசனுக்கென்று ஒரு பாட்டுப் பரம்பரை உருவானது. கவிதா மண்டலம் என்று பாரதிக்குப் பின் ஏதும் தென்படவில்லை. இருந்திருந்தாலும் தெரியாமல் இருந்திருக்கலாம். அடியேன் பாரதியைப் பின்பற்றியே அமைத்துக்கொண்டேன். இதுதவிர மற்ற அமைப்புகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டவும் ஒரு தனித்துவத்தை நிலைநாட்டவுமே கவிதாமண்டலம் என பெயரிட்டேன்.

■ தங்களுக்குக் கவிதை எழுதக் கற்றுத் தந்த ஆசான்கள் பற்றி...

# தாமண்டலம்

# சங்ககாலம்



● கவிதை எழுதுவது என் தாய் பாடிய தாலாட்டிலிருந்தும், கிராமத்து மனிதர்களின் எகனை மொகனைப் பேச்சுகளிலிருந்தும், எங்கள் ஊர் ஒயிலாட்டத்தின் இசையிலிருந்தும் கற்றாலும், பாவேந்தரும், கலைஞரும், கண்ணதாசனும் என் கவிதை உணர்வுகளைத் தூண்டினாலும் என் கவிதைகளை வழிமொழிந்து ஆற்றுப்படுத்தி பாக்களின் வடிவமைப்புகளை அடையாளப் படுத்தியவர் என் தமிழாசிரியர் முதுபெரும் புவவர் திரு.சடாச்சரம் அவர்கள்.

■ மரபின் மேல் மாறாத பாசம் கொண்டதற்குச் சிறப்புக் காரணம் ஏதாவது உண்டா?

● மரபின்மேல் மாறாத பாசம் என்பது வாழையடி வாழையாக வந்த தொப்பூழ்க்கொடி உறவு. தாயும் தந்தையும் போல் மரபு நமக்கு. தம்பி தங்கைகள்தான் மற்றவர்கள். நம் இலக்கியங்களின் இயங்கு தளம் மரபின் அடித்தளத்தில் நிற்கிறது. அதுவே என் மனதிலும்மங்காமல் நிற்கிறது.

■ தங்கள் முதல் கவிதை எது? எப்போது வாசித்தீர்கள் எனப் பகிரமுடியுமா?

● முதல் கவிதை என்றால் அது நினைவு தெரிந்த நாட்களிருந்து தொடங்கியது என்றாலும் ஊரில் மேடையில் பொங்கல் விழாவில் பொங்கல் சிறப்பை எழுதி வாசித்ததுதான். முதலில் ஏறிய பெரிய மேடை மீரா தலைமையில் மதுரை ஜீவாநகரில் போவோம் புதுஉலகம் என்ற கவிதைதான்.

■ தமிழ்கூறும் நல்லுலகில் நெடியதொரு கவிதைப் பயணத்தைத் தொடரும் தாங்கள் எழுதிய நூல்கள் பற்றி...

● 89-ல் விழிகள் சிவக்கின்றன, 93-ல் அங்கயற்கண்ணி அந்தாதி, 98 ல் காற்றுக்குச் சிறை இல்லை, 2005 ல் அங்கயற்கண்ணி அருள் உலா, 2007ல் நூபுரகங்கை வரலாற்றுப்புதினம், 2011ல் மருதுகாவியம், 2014ல் கவிதைக்கு மெய்யழகு, உள்ளங்கள் பேசும் மொழி (காமத்துப்பால் கவிதைகள்) 2015ல் தேவர்காவியம், 2017ல் மக்கள்போராளி, சின்னமருது, கண்மாய்க்கரை மனிதர்கள் (நாவல்), தமிழ்ப்பாவை போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

■ மதுரை மீனாட்சி அம்மனைப் பற்றி எழுதிய தங்கள் நூலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

● மீனாட்சியை தெய்வமாகப் பார்ப்பதில்லை. மாறாக மதுரையை ஆளும் பேரரசியாகவும், நெடிய தமிழ் மரபில் வந்த நம் மூதாதைகளில் ஒருத்தியாகவே பார்க்கிறேன். அவளை எழுதிய பின் என் அனைத்துத் துன்பங்களும் ஓடி மறைந்தன. அவள் தரும் சமிக்ஞைகள் என்னை ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கிறது.

■ தங்கள் பாடல்கள் இசைத்தட்டில் வெளியானதாகக் கேள்வியுற்றேன். அவற்றை பற்றிய நினைவுகளைப் பகிர்வீர்களா?

● ஆம். அவை பக்திப் பாடல்கள். சிங்க வாகனம் என்ற பத்ரகாளியம்மன் பாடல்கள், நவக்கிரக நாயகி என்று ஒன்பது கோள்கள் அவைகளின் செயல்பாடுகள், அவைகளின் தாக்கங்கள், அதிலிருந்து மீளும் வழிகள் இவைகளை அந்தப்பாடல் விளக்கும். இவை தவிர தென்பாண்டித் தேவியர்கள் என மதுரை மீனாட்சி, தேனிவீரபாண்டி கௌமாரி, தாயமங்கலம் முத்துமாரி, மடப்புரம் காளி, நாட்டரசன் கோட்டை கண்ணாத்தாள் எனப்படும் தெய்வங்களின் பெருமை கூறும் பாடல்களவை.




வலங்கைமான் அரசினர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற குருதிக்கொடை நிகழ்ச்சியில் அக் கல்லூரி முதல்வரின் நேர்முக உதவியாளருக்கு நினைவுப்பரிசு வழங்கியது. அருகில் மதுரை மீனாட்சி மருத்துவமனை இரத்த வங்கி மேலாளர் இரவி மற்றும் கல்லூரி கண்காணிப்பாளர்

■ தற்போது அந்த இசைத்தட்டுகளை யூடியூப் வழியாக உலகத்தமிழர்களுக்கு அறியத்தரும் முயற்சி உள்ளதா ஐயா?

● ஆம். அதை விரைந்து செய்ய வேண்டும்.

■ தங்களின் தமிழ்ப்பாவை உருவானது எப்படி?

● நான் எழுதிய நூல்களில் எனக்குப் பிடித்த நூல் அது. ஒரு மார்கழியில் ஆண்டாளின் திருப்பாவை படிக்கும் போது அதே இலக்கணத்தில் தமிழ்ப்பாவையை உருவாக்கினேன். முப்பது பாடல்களே ஆனாலும் தமிழின் தமிழரின் பெருமைகளை, தமிழின் தொன்மைகளை தலைமுறைகளுக்கு உரைக்கும். இதை வாழ்நாள் கடமையாக எழுதினேன்.

■ செந்தமிழர் திருப்பள்ளி எழுச்சி எப்போது நூலாக வெளிவரும்?

● அதே இன்னொரு மார்கழிதான் இந்த உந்துதலைக் கொடுத்தது. ஆண்டாளும் மாணிக்கவாசகரும் உள்ளுக்குள் ஒலிஎழுப்ப செந்தமிழர் திருப்பள்ளி எழுச்சி உருவானது. விரைவில் அதுவும் நடைவிருத்தமும் வெளிவரும்.

■ சங்கத்தமிழ்ப் பாடல்களையும் சங்கப் புலவர்களையும் கைகளில் எடுத்துக் கொண்டதற்குக் காரணம் என்ன ஐயா?

● நம் சொத்துகள் சங்க இலக்கியம். சங்கப் புலவர்கள் நம் பரம்பரையின் இரத்த நாளங்கள். உலகில் இதுபோல ஒரு இலக்கியம் இல்லை. ஒப்பனை இல்லாத உண்மையைச் சொல்லும் வாழ்வியல் இலக்கியங்கள். இவை தமிழ்மக்களிடம் போய்ச் சேர வில்லை. தழுவல் இலக்கியங்கள் பெற்ற பெருமைகளை செவ்வியல் இலக்கியங்கள் பெற வில்லை எனும் ஆதங்கமே என் சங்க இலக்கியக் காதல்.

■ கவிதை எழுதுபவர்களை சமூகம் அவ்வளவாகக் கண்டுகொள்வதில்லை என்பது உண்மையா? (ஒருசில பெரிய பிரபலமான கவிஞர்களைத் தவிர்த்து)

● உண்மைதான். கவிதை பணம் தராத வரைக்கும் கவிதையை உணர்ந்தவர்கள் தவிர சமூக அங்கீகாரம் கிடைக்காது. இது ஒருசாபக்கேடு. உண்ணும் உணவு? பருகும் நீர், குடியிக்கும் வீடு எல்லாமே ஓரளவு கவிதையால் சாத்தியமான என் நிலையைக் கூட பலர் நம்புவதில்லை. ஏதோ எங்கள் முதலாளி பரிதாபப்பட்டுத் தருவதுபோலவே எண்ணுகிறார்கள். என்ன செய்வது..? மாற்றுவோம்.

■ எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் என்று கவிஞர்களை இகழ்வது குறித்து தங்கள் கருத்து

● அதை அப்படி எடுத்துக் கொள்ள வேண்டாம். எழுதிய புலவனின் ஏட்டுக் கருத்துகளை இடைச்செருகலாக எழுதிச் சிலர் கெடுத்திருக்கலாம். அதைச்சொல்ல வந்தவர்களின் மொழி கவிஞர்களின்மேல் இழிவானதாக எறியப்பட்டிருக்க வேண்டும்.

■ சங்க இலக்கியங்கள் பாடத்திட்டங் களில் மட்டுமே உள்ளன. அவற்றை மதிப்பெண் பெறவே மாணவர்கள் படிக்கி றார்கள். அதனால் வேறு பயன் இல்லை என்பது உண்மையா?

● கல்வியாளர்களின் செயல் அது. பலர் சாய்சில் வந்தவர்கள். அவர்களில் பலருக்கு சங்க இலக்கியங்களை வாசிக்கக் கூடத் தெரியாது. திருப்புகழை ஏன் கம்பனைக் கூட சந்தத்தோடு வாசிக்கத் தெரியாதவர்கள், இலக்கிய அறிவு இல்லாதவர்களால் வடிவமைக்கப்படும் பாடத் திட்டங்களினால் நேரும் கொடுமை இது. ஒழுங்காக சங்க இலக்கியங்களைச் சொல்லிக் கொடுத்தால் இன்று ஆணவக் கொலைகள், முறையற்ற உறவுகள் நேராது. மனித நேயம் மேம்படும். யாதும் ஊரே யாவருங் கேளிர் என்பது மெய்யாகி இருக்கும். பயனற்றவர்களால் நேர்ந்த பரிதாபம் இது.

■ பாரதி என்றொரு கவிஞன் பிறவா திருந்தால்?

● பாரதி என்ற ஒரு கவிஞன் பிறவாதிருந்தால் கவிதைகளில் ஆண்மைத் தன்மை குறைந்திருக்கும். ஒரு மானமுள்ள கவிதைப்பரம்பரை தோன்ற இன்னும் ஒரு நூற்றாண்டு ஆயிருக்கும். தமிழகம் தமிழுக்குத் தனி உயர்வளிக்கும் தலை வனை எண்ணித் தவங்கிடக்கையிலே இலகுபாரதி புலவன் தோன்றினான் என்ற பாவேந்தர் கூற்று முற்றிலும் உண்மை. பாரதி தமிழ் செய்த தவம்.

■ கம்பனைவிட இன்று யாரும் கவிச் சக்கரவர்த்திகள் உள்ளனரோ?

● கம்பனின் அரியணை அப்படியே தான் இருக்கிறது. அது இன்னும் சில காலம் அப்படியேதான் இருக்கும். யார் அதில் அமர்வார்கள் என்பதைத் தமிழ்த்தாய்தான் தீர்மானிப்பாள் .

■ பாரதிதாசனின் எழுச்சிமிகு பாக்கள் பற்றி

● பாரதி கண்டெடுத்த புலி. இந்தச் சூழலிலும் தமிழர்கள் பலர் இனவுணர்வு, மான உணர்வு, மண்ணுணர்வு சுயமரி யாதையுடன் குகைவாழ் ஒரு புலியே என குணமேவியவர்களாக இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பாரதி தாசனின் பாக்கள். அவை தமிழர் ஏந்த வேண்டிய வாட்கள்.

■ தங்களது இயற்பெயரே பொற்கைப் பாண்டியனா? அல்லது புனைப்பெயரா? இதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் உள்ளதா?

● இயற்பெயர் இராசேந்திரசோழன். பள்ளியில்சேர்க்கும்போதுஎந்தஆசிரியரோ பெயரில் சோழனை எடுத்துவிட்டு இராசேந்திரன் என சேர்த்துவிட்டனர். பின்னாளில் என் முதல்மேடையில் கவிதை வாசிப்பைக்கேட்ட முன்னாள் சபாநாயகர் அண்ணன் காளிமுத்து தம்பியின் கவிதைவரிகள் பாண்டியனின் வாற்வீச்சுப் போல என்றார். அதற்கு முதல்நாள் சிலம்பை வாசித்தபோது பொற்கைப்பாண்டியன் கதை படித்தேன். இவர் பாண்டியன் என்றதும் அதன் முன் பொற்கை என்று சேர்த்துக்கொண்டு பொற்கைப்பாண்டியன் ஆனேன். எனக்கு இயற்பெயர் சோழமன்னன் பெயர். புனைபெயர் பாண்டியமன்னன் பெயர்.

■ தங்களது அன்றாடப் பணிகளுக் கிடையே கவிதை எழுதுவதற்கென ஏதும் நேரம் ஒதுக்குகிறீர்களா? அல்லது தோணும்போதெல்லாம் எழுதுகிறீர்களா?

● கவிதை மூச்சுவிடுதல் போல் அமைந்துவிட்டதால் இதற்கென நேரம் ஒதுக்குவதில்லை. சில நேரங்களில் அது அடம்பிடிக்கும். அப்போது அதன் போக்கில் விட்டுவிட்டால் அதுவே வந்து பற்றிக்கொள்ளும். மழை பொழிவது போல, பூ மலர்வது போல இயல்பிலே கவிதை இருக்கிறது.

■ தங்களது மேடைகளில் சங்க இலக்கியத்தில் உள்ள 99 பூக்களின் பெயர்களையும் சொல்லுவதை வழக்கமாக வைத்துள்ளீர்களே? அதற்கு ஏதும் காரணம் உண்டா? எவ்வளவு காலமாக இதனைச் சொல்லி வருகிறீர்கள்?

● அதற்கும்அண்ணன் காளிமுத்துதான் காரணம். மதுரைவடக்குமாசிவீதி மேலமாசி வீதியில் எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் 1980-ல் அவர் மளமள வென்று சொன்னதைப் பார்த்து நான் மிரண்டேன். எனக்கு விபரந்தெரிய அவர்தான் அதைச் சொன்னவர். அடுத்த நாளே நானும் மனப்பாடம் செய்துவிட்டேன். பின்னாளில் அவரை தக்கார் வி.என். சிதம்பரம் அவர்களுடன் ஒரு விழாவில் சந்தித்தபோது அவரிடம் நானும் உங்கள் பூக்களைச் சொல்ல ஆரம்பித்துவிட்டேன் என்றேன். அதை ஓயாமல் சொல்லும்போது சிலர் கேலி செய்கின்றனர் என்றேன். சொல்றவன் சொல்லட்டும் நீபாட்டுக்குசொல்லு. உன்னைப்பார்த்துப் பலர் சொல்வர். சங்கத்தமிழ் பரவட்டும் என்றார். ஆனாலும் அதை கடந்த இருபதாண்டுகளாகச்

மதுரை திருவள்ளுவர் மன்றத்தில் நடைபெற்ற கவியரங்கில் திருவாளர்கள் கவிஞர் வெற்றிப்பேரொளி மற்றும் மயிலாடுதுறை தமிழ்ச்சங்கத்தின் தலைவர் ஜெனிஃபர் பவுல்ராஜ் அவர்களுடன் பொற்கைப்பாண்டியன்.



சொல்லிவருகிறேன். ஆனால் அதைச் சொல்லும்போது நடிகர் சிவகுமாரையும் அவர் மகன் சூர்யாவையுமே மற்றவர்கள் சொல்லும் போது எரிச்சல் வரும். நடிகர்கள் சொல்வது மகிழ்ச்சியே. அதை ஒப்பிடும் போது எரிச்சல் வரும். இப்போதெல்லாம் அதைக்கண்டு கொள்வதில்லை.

■ தங்களின் ஞாபகசக்தி பிரமிக்க வைக்கிறது. இதற்கென ஏதும் பயிற்சி மேற்கொள்கிறீர்களா?

● அப்படி எல்லாம் இல்லை. இயல்பாகவே இருப்பதைத்தக்க வைத்துக் கொள்கிறேன். ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர்கள் கற்றுத் தந்த மனப்பாடப் பயிற்சியும் ஒரு காரணமாக இருக்கலாம்.

■ தற்போதைய பணியிடத்தில் மருத்துவ மலர் ஒன்றின் ஆசிரியராக இருக்கிறீர்களே? அது எவ்வளவு காலமாக வெளியிடப்படுகிறது?

● மீனாட்சி மருத்துவமலர் அது. ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் கொண்டு வந்த முதல் இதழ் அது. என் திறமைகளை எல்லாம் அதில் கொட்டியிருக்கிறேன். தினம் இரண்டு துறை சார்ந்த மருத்துவர்களிடம் பேட்டி, நவீன மருத்துவம் அறிமுகம், வெண்பாப் போட்டிகள் என தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வலம் வந்த இதழ். அனைத்து நூலகங்கள் அயல்நாடுகள் என ஒரு இருபதாண்டுகள் வெளிவந்தது. கடந்த சில ஆண்டுகளாக அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதைப் படித்தால் ஒரு மருத்துவ கல்லூரியில் படித்த அனுபவம் ஏற்படும். இப்போது மகிழ்ச்சி என்ற இதழ் தற்போது என்னை ஆசிரியராகக்கொண்டு வெளிவருகிறது.

■ தமிழ்க் கவிஞர்களில் தாங்கள் சிறந்தவர் என்போரை வரிசைப் படுத்த இயலுமா?

● வாழையடி வாழையாக வந்த கவி மரபில் மக்களுக்காகப் பாடிய கவிஞர்கள் அனைவரும் உயர்ந்தவர்களே. சங்கப் புலவர் களையும், வள்ளுவன் இளங்கோ கம்பன் பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்ற பாட்டுப் பரம்பரையின் தொடர்ச்சியில் மக்களைச் சிந்திக்கும் கவிஞர்கள், நாமார்க்கும் குடியல்லோம் என்ற.அப்பர், தமிழ்க் கவிதை உலகில் பெரியாருக்கு முந்திய சீர்திருத்தக் கருத்துகளை விதைத்த இராமலிங்க அடிகளார், பெண்ணுரிமை பேசிய முன்சீப் வேதநாயகம் பிள்ளை என நம் பாட்டுப்பாட்டன்களை நிறையவே வரிசைப்படுத்தலாம்.

■ தற்போதைய கவிஞர்கள் பற்றி

சென்னையில் நடைபெற்ற கவிதா மண்டல நிகழ்வில் திரு நல்லக்கண்ணு அவர்களுடன் பொற்கைப்பாண்டியன் மற்றும் ஆளுமைகள்.



தங்களுடைய கருத்து என்ன?

● கவிதை எழுதவும் கவிஞர் என தங்களை அழைக்க விரும்புவதும் அதற்கான உழைப்பதும் மிக அருமை. ஆனால் அதைத் தக்கவைத்துக்கொள்ளும் வண்ணம் தமிழின் வேர்களை அறிவதும், இலக்கிய இலக்கணச் செழுமைகளைக் கூர்தீட்டவும் பலர் முயல வேண்டும். கவிச்சக்கரவர்த்தி என்ற கம்பன் பட்டத்தை நாம் பெறுகிறோமே கம்பனை ஓரளவாவது அறிந்துள்ளோமா என்ற கூச்ச உணர்வு விருது தருபவர்களுக்கும் பெறுபவர்களுக்கும் இருக்க வேண்டும். விருதுகள் ஒருவரை அடையாளப்படுத்தாது. கவிதைத்திறம்ந்தான் உலகிற்கு ஒருவரை அடையாளம் காட்டும். அதை இளைய தலைமுறைகள் உணரவேண்டும். பொது வாகவே அனைவரிடமும் ஒரு விழிப்புணர்வு பெருகியே வருகிறது. இது மேலும் பெருக வேண்டும்.

■ தமிழ்ச்சங்கங்களுக்கும் முகநூல் குழுமங்களுக்கும் என்ன ஒற்றுமை வேற்றுமை காணப்படுகிறது ?

● ஒரு காலத்தில் சைவமுந் தமிழும் தழைத்தினி தோங்குக என ஆரம்பிக்கப்பட்ட சைவமடங்கள் அதை மறந்து விட்டன. தமிழுக்குஎன்றேதோன்றியசங்கங்கள்அதை பெயரளவிற்கு நடத்துகின்றன. ஆனால் அவைகள் செய்யத்தவறியவைகளை முக நூல் குழுமங்கள் சிறப்பாகச் செய்கின்றன. கூடலில் புலவர்கள் கூடியதுபோல் இன்று ஒவ்வொரு குழுமத்திலும் புவவர்கள் கூடுவதும், தமிழ் தமிழ் என்று பேசுவதும் ஒரு புரட்சிதான். இது மகிழ்வான ஒன்று. ஆனால் அதை அனைத்தே புலவர் தொழில் என்று கூடிக் கலந்து மேடை ஏறி உவப்பத்தலைகூடி உள்ளப்பிரிதல் இன்றி கற்றுக்கொள்வதிலும், குறைகளை ஏற்றுக் கொண்டு அதைக்களையும் மனப்பக்குவமும் குழுமக்கவிஞர்களுக்கு வரவேண்டும்.



↑ மற்றொரு நிகழ்வில் கவிஞர் முத்துலிங்கம் அவர்களுடன்...

↓ கவியரங்க மேடையில் சக கவிஞர்களுடன் ...





கொரானா ஊரடங்கின்போது மருத்துவப்பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு கைகளைத்தட்டுகிறார் தனது இணையருடன் பொற்கைப்பாண்டியன்

■ முகநூல் குழுமங்கள் நாளுக்கொன்று தோற்றுவிக்கப்படுவது குறித்து...

● தோன்றுவது பெரிதல்ல. தோன்றிற் புகழுடன் தோன்ற வேண்டும். இனம், மொழி, பண்பாடுகளின் காவலாக இருந்தால் வரவேற்க வேண்டியதுதான். செயல்பாடுகளைப் பொறுத்து அது வெல்லும். இல்லையேல் காலம் அதைத் தள்ளும்.

■ இளைய கவிஞர்களுக்குத் தங்களது அறிவுரை என்ன?

● அறிவுரையெல்லாமில்லை. அனுபவங்களிலிருந்து நாங்கள் கற்றோம். நீங்களும் அனுபவங்களில் அறிந்து கொள்ளுங்கள். முன்னோடிகளின் கருத்துகளையும் உள்வாங்குங்கள். அகந்தைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள். பணிவு வளர்க்கும் அகந்தை அழிக்கும் என்பதை உணருங்கள். உங்கள் தமிழ் உலகாளும்.

■ நா. காமராசர், மு.மேத்தா, அப்துல் ரஹ்மான் இவர்களைப் பற்றி...

● நா.காமராசன் புதுமைகளின் ஊற்று! மேத்தா புதுக்கவிதையின் நாற்று! கவிக்கோ ஒரு கவிதைச் சிற்பி. தமிழ் இவர்களால் ஒருகௌரவமகுடம் சூடியது.

■ வைரமுத்து அவர்களுடன் தங்கள் உறவு - நட்பு குறித்து...

● கவிப்பேரரசு வைரமுத்து சமூக இலக்கியப்பேரவை அமைத்தபோது அறிமுகம் அரும்பியது. அவர் கலந்துகொள்ளும் எங்கள்

# எனக்குள் நீ...

சிந்தைக்குள் நுழைந்து சிறு
சிருங்காரம் செய்கிறாய்
எனை ஒரு நொடியும் விலகாமலுனை
ஆடையாய் நெய்கிறாய்
சிறு லீலைகள் செய்து
மார்பில் சாய்கிறாய்
உணர்வுக்குள்ளோடி
உற்சாகமூட்டுகிறாய்
உறைநிலையில் இருந்தாலும்
உள்ளுக்குள் தீ மூட்டுகிறாய்
நாணத்தை மெத்தையிட
நளினமாய்க் கேட்கிறாய்
நாசூக்காகவே நரம்பெல்லாம்
நடை பயில்கிறாய்
இதயத்துள் கருக்கட்டும் நம் காதலை
இதமாய் நலம் விசாரிக்கிறாய்
என் பிரபஞ்சம் மொத்தமும் நீயாகி
நினைவலைகளில்
ஊர்கோலம் போகிறாய்



- வஃபீரா வஃபி




பகுதித் திருமண நிகழ்வுகளை நான் தான் தொகுத்து வழங்குவேன். பின் அது வெற்றித் தமிழர் பேரவையாக மாறியது. எங்கள் மருத்துவமலரின் முதல் இதழை அவர்தான் வெளியிட்டார். எங்கள் மருத்துவமனைக்கு இரண்டு மூன்று நிகழ்விலும் கலந்து கொண்டார். எங்களுடன் நெருக்கமான உறவும் கொண்டிருந்தார். ஒருமுறை ஏ.ஆர். ரகுமானுடன் சிறு ஊடல் நிகழ்ந்தபோது திருப்புவனம் திருமண விழாவில் எனக்குப் பதிலாக பொற்கை பேசுங்கள் என்பார். இப்போது சந்தித்து வெகுகாலமாகி விட்டது.

■ திரைப்படங்களுக்குப் பாட்டெழுத முயன்றுள்ளீர்களா? அந்த அனுபவம் பற்றி...

● முயலவில்லை. அவர்களாக வருவார்கள். மெட்டுத் தருவார்கள். பாட்டு வாங்குவார்கள் படமெடுக்கமாட்டார்கள். இரண்டு படங்களுக்கு எழுதியுள்ளேன். ஒரு படத்தில் எல்லாப்பாட்டுமே எழுதியுள்ளேன். சைந்தவி, மாலதி, முகேஷ் பாடியுள்ளனர். ஒருபடத்திற்கு நெல்லைத்தமிழில் இரண்டு பாட்டு எழுதியுள்ளேன். என் நண்பர் கவிஞர் சிநேகனின் சொந்தப்படமான பொம்மிவீரனில் மதுரையைப் பற்றி எவரும் சொல்லாத வண்ணம் ஒருபாட்டு. வேல்முருகன் பாடியுள்ளார். படம் எப்போது வருமென்று தெரியாது. அதே சிநேகனின் இராஜராஜ சோழனின் போர்வாள் படத்திலும் ஒரு டைட்டில் பாட்டு வாங்கியுள்ளார். வரட்டும்.

■ தமிழ்நெஞ்சம் இதழைப் பற்றியக் கருத்துகள்...அதன்வாசகஎழுத்தாளர்களுக்கு தாங்கள் கூற விரும்புவதென்ன?

● தமிழர் நெஞ்சமெல்லாம் தங்கித் தமிழ் வளர்க்கிறது தமிழ் நெஞ்சம்.

உலகத் தமிழர்களின் ஒன்றிணைப்பாக, உலகக்கவிஞர்களின் ஒருங்கிணைப்பாக, உன்னதக் கவிஞர்களின் அறிமுகமாக தன்பணியைப் பொன்பணியாகச்செய்து வருகிறது தமிழ்நெஞ்சம்.

அந்த வகையில் திரு. அமின் உச்சியில் வைத்து மெச்சக்கூடியவர்.

இலக்கியத் திறவுகோலாக இருக்கும் தமிழ்நெஞ்சம் இதழின் வாசகர்களுக்கு ஒரு இலக்கிய கிரீடத்தை இதழ் சூட்டுகிறது. அதை உள்வாங்கி உணர்ந்து இதழின் வாசிப்பையும் நேசிப்பையும் ஒரு தவமாகவே செய்வது உன்னதமான செயல். இதழில் எழுதுபவர்கள் சிறப்பாக எழுதுகிறார்கள். தொடர்ந்து தமிழ், தமிழுணர்வு, உலகியல்பார்வை, படைப்பில் சமரசமின்மை, செவ்வியல் சிந்தனைகளோடு தமிழ்நெஞ்சத்தை மலரச் செய்வோம். வாழ்க.

**ஐயாவின் பணி சிறக்க தமிழ்நெஞ்சம் வாழ்த்துகிறது. நன்றி!** ■

# உலக நீதி

புலவர்.தியாகு.சோமு

ஓர் அழகான சிற்றூர் இருந்தது. அவ்வூரில் நீதி தேவன் முன் சிலைக்கு கீழ் அமர்ந்து அரசர் நீதி வழங்குவார்.

ஒருநாள் ஒரு திருடனைக் கொண்டு போய் அரசன் முன் அவ்வூர் மக்கள் அவனை நிறுத்தினார்கள்.

திருடன் செய்த குற்றத்தைக் கேட்ட அரசர் அவனை உடனே தூக்கிலிடுங்கள் என்று காவலாளிகளுக்கு உத்தரவிட்டார்...

இதைக் கேட்ட திருடன் அரசே எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் அரசே நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன் அரசன் ஓ அப்படியா சொல்லு பார்க்கலாம் என்றார்.

அந்தத் திருடன் தன் தந்தை சொன்ன ரகசியத்தை சொன்னான். அதாவது அரசே அது எனக்கு மிக முக்கிய ரகசிய மந்திரம் ஒன்றை எனக்கு என் தந்தைக் கற்றுக் கொடுத்தார். ஒரு பலாக்கொட்டையை தரையில் நட்டு ஒரே இரவில் மரமாகி பழங்கள் கொடுப்பதை உங்களுக்கு இப்போ நான் காட்ட விழைகிறேன் அரசே!

திருடன் கூறியதைக் கண்டு வேண்டுக் கோளுக்கு இணங்கி ஏற்றுக் கொண்டார்.

அரசே இந்தப் பலாக்கொட்டையை வாழ்க்கையில் ஒரே ஒரு முறைக் கூட திருடாதவர்கள் நட்டு வைக்க வேண்டும் என்றான். அரசே அப்போது தான் நான் சொல்லும் அந்த மந்திரம் பலிக்கும் என்றான். அரசன் உடனே நீயேச் செய் என்றார். நான் இதைச் செய்தால் பலன் கிடைக்காது என்றார்.

அரசே உங்க உயர் அதிகாரிகளை நடச் சொல்லுங்க என்றான்.

உடனே அரசர் தன் உயர் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அதை எதிர்பார்க்க இல்லை. உயர் அதிகாரி மலைத்துப் போய் நின்றார். அரசர் அதிகாரியே என்று குரல் கொடுத்தார். அவர் நான் சிறுவனாக இருக்கும் போது என் தங்கையின் உணவுப் பொருளைத் திருடி தின்று விட்டேன் மற்றும் எழுதுப்பொருட்களை களவாண்டு விட்டேன் வேந்தே, ஆகையால் என்னால் நட இயலாது. இது போன்று அரச சபையில் அனைவரிடம் கேட்டான் நாங்கள் ஏதோ ஒரு வகையில் தவறு செய்துள்ளோம் என்றனர்.

அந்தத் திருடன் அரசனிடம் கேட்டான். அரசர் தயங்கிய படி நின்றார் அரசே ஏன் தயக்கம் என்றான் நானும் சிறுவயதில் அப்பா அணிந்து இருந்த முத்துமணி மாலையை திருடினேன் என்றார் அரசர். ஆகையால் என்னால் அந்தப் பலாக்கொட்டையை நட இயலாது.

திருடன் வேந்தன் மற்றும் மற்றவர்களைப் பார்த்து நீங்கள் எல்லோரும் மிகப் பெரிய மனிதர்கள் என்று நம்பியிருந்தேன் ஆயினும் நம்பிக்கை வீண் போய் விட்டது. ஆகையால் நீங்களும் திருட்டுக் குற்றம் செய்தவர்கள் தான் என்று உண்மையை சொன்னீர்கள்.

நான் காலப்போக்கில் பசியின் கொடுமையால் திருடினேன் எனக்கு தூக்கு தண்டனைத் தர உத்தரவிட்டுள்ளார் அரசன் என்றான் திருடன்.

அரசன் சற்று நிதானமாக யோசித்துப் பார்த்து திருடனுக்கு தூக்கு தண்டனைத் தர வேண்டும் எண்ணத்தை முற்றிலும் மாற்றிக் கொண்டார்.

அப்போது அரசன்... திருடா நீ மிகப்பெரிய நீதிபதி என்று பாராட்டினார். மேலும் மன்னித்து விடுதலையும் செய்தார். திருடா நீ உலகிற்கு பாடம் கற்பித்து விட்டாய் என்றார். ■

# மணிக்கூ கவி வடிவம்



மணிக்கூ கவி
நஸீரா எஸ் ஆப்தீன்.

இலங்கை

ஜப்பானிய மொழியிலிருந்து தமிழுக்கு வரவழைக்கப்பட்ட 'ஹைக்கூ' கவிதையானது பல்வேறு இலக்கண வரைமுறைகளை விதித் துள்ளது. தமிழிலே ஹைக்கூ வின் தன்மைகள் பேணப்பட வேண்டும் என்பதற்காக தொடர்ந் தும் ஹைக்கூ பயிற்சிக் களங்கள் முகநூலிலும் குழுமங்களிலும் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன.

பல கவிஞர்கள் ஹைக்கூ கவிதை களை எழுதிய பின் ''இது ஹைக்கூ தான்; இது ஹைக்கூ அல்ல'' என்ற வாதப் பிரதிவாதங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. எனவேதான், மூன்று வரிகளில் வடிக்கப்படுகின்ற கவிதைகள் அனைத்தையும் உள்வாங்கி ஊக்கப்படுத்துகின்ற ஒரு கவிதை வடிவமாக எமது 'மணிக்கூ' கவி வடிவம், அனைத்து கவிஞர்களையும் மணிக்கூ கவி யெழுத அழைப்பு விடுக்கின்றது.

இங்கு முக்கிய விடயம் என்ன வென்றால், நீங்கள் எழுதுவது ஒரு ஹைக்கூ வாக இருந்தாலும் அதனை மணிக்கூவில் அடக்கிவிட முடியும். மணிக்கூ கவிதை வடிவத்தினை கவிஞர்களாகிய நீங்களும் ஏற்றுக் கவிதைகளைப் படைக்கும் போது மணிக்கூவின் படைப்பாளியாகிய எனக்கு உங்களால் தரப்படும் மிகப்பெரும் பொக்கிஷங்களாக அவை என்னை மகிழ் விக்கும் என்பது உண்மை.

*

பறக்கின்ற குருவியைத்
துரத்திக் கொண்டேயிருக்கிறது
மற்றொரு குருவி.

*

உச்சி வெய்யில்
மரத்தின் கீழ் இளைப்பாறுகின்றன
உதிர்ந்த சருகுகள்.

மேலேயுள்ள இரண்டும் சிறந்த ஹைக்கூ களாக நாம் எடுத்துக்கொண்டால்...

பறக்கின்ற குருவியைத்
துரத்திக் கொண்டேயிருக்கிறது
ஒரு காக்கை.

உச்சி வெய்யில்
மரத்தின் கீழ் இளைப்பாறுகின்றன
ஆட்டு மந்தைகள்.

பின்னால் வந்த இரண்டும் ஒரு சாதாரண நிகழ்வு. இவற்றை சிறந்த ஹைக்கூ களாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. முதலிரண்டிலும் மூன்றாவது வரியில் நாம் எதிர்பாராத ஒரு திருப்பம் காணப்படுகின்றது. எனவே அவற்றை ஹைக்கூ களென நாம் நினைக்கின்றோம். அவற்றைக் கூட சில ஹைக்கூ வல்லுனர்கள் "இல்லை. இவை ஹைக்கூ வாகமாட்டாது" எனவும் விமர்சிக்கின்றனர். எனவே, "ஹைக்கூ" என்பதில் வெவ்வேறு கவிஞர்கள் வெவ்வேறு கருத்துக்களைத் தருகின்றனர்.

மேலே தரப்பட்ட மூவரிக் கவிதை களில் பறக்கின்ற குருவியை மற்றொரு குருவியும் துரத்த முடியும்; காகமும் துரத்த முடியும். அவ்வாறே மர நிழலில் சருகுகள் குவிந்து கிடக்கும்; ஆட்டு மந்தைகளும் இளைப்பாறக்கூடும். ஆயின், துரத்துகின்ற குருவியையும் உதிர்ந்த சருகுகளையும் கவிதை பாட முடியுமாயின் துரத்துகின்ற

காக்கையையும் ஆட்டு மந்தைகளையும் ஏன் கவிதைக்குள் கொண்டு வரக் கூடாது என்ற வினா எழுகின்றதல்லவா?

கவிஞனுக்கு எல்லாவற்றையும் பாட சுதந்திரம் உண்டு. எனவேதான், மேலே சொல்லப்பட்ட எல்லா விடயங்களையும் தயக்கமின்றி "மணிக்கூ" வாக எழுதி விடுங்கள்.

நாம் ஜப்பானிய ஹைக்கூகள் சிலவற்றின் மொழி பெயர்ப்புகளைப் பார்ப் போமாயின் ஹைக்கூ என்பது அத்தனை சிக்கலானதொன்றல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக...

நிலவிற்கு ஒரு
கைப்பிடி வைத்தால்
எத்துணை அழகான கைவிசிறி.
(சோகன்)

மேகம் சில நேரங்களில்
நிலவை ரசிப்பவனுக்கு
ஓய்வு தருகின்றது.
(மட்சுவோ பாஷோ)

பழைய குளம்
தவளை குதிக்கையில்
தண்ணீரில் சத்தம்.
(மட்சுவோ பாஷோ)

யாரது
குளத்தில் கல் விட்டெறிந்தது?
உடைந்ததே நிலா முகம்.

இவ்வாறான பல ஜப்பானிய ஹைக்கூகளை நோக்கும் போது தற் போது நாம் அறிந்து வருகின்ற ஹைக்கூ விதிமுறைகள் அனைத்துமே கடுமையானவை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனவே தான், உங்கள் மனதிலே உதிக்கின்ற மூவரிக் கவிதைகளை (அவை ஹைக்கூ வாக இருப்பினும் சரியே) "மணிக்கூ" எனும் பெயரில் எழுதி விடுங்கள்.

இனி, மணிக்கூகள் சில பார்ப்போமா?

●

வீட்டிலே சிறுமி
அடம் பிடிக்கிறாள்
கைப்பேசியைக் கேட்டு.

●

திறந்த கதவினுள்
சத்தமின்றி நுழைகின்றது
திருட்டுப் பூனை.

●

மூடிய கறிச்சட்டியைத்
திறந்தே சுவைக்கின்றது
அடுக்களை எலி.

●

மாலைப் பொழுது
வாடித் தொய்கின்றன
செம்பருத்தி மலர்கள்.

●

உச்சி வெய்யில்
குளிர்ச்சியைத் தருகின்றது.
வத்தகைப் பழம்.

●

புத்தக அடுக்கில்
ஓரமாய் ஓடுகின்றது
கரப்பான் பூச்சி.

●

இரவின் ஒளியில்
சுவரில் உலா வருகின்றன
பல்லிகள்.

●

பூரணை நிலவு
குளிர்ச்சியைத் தருகின்றது
வீசுகின்ற தென்றல்.

●

கோடை மழையில்
வீட்டினுள் வருகின்றது.
புழுதி வாசனை.

■



# தாம்பத்யம்

## நௌஷாத் கான் லி

டே அசோக் இங்க வாடா

என்ன தாத்தா ?

தாத்தா கூப்பிடுறேன்லே, என்னன்னு தான் ஒரு வார்த்தை கேட்டிட்டு போனா குறைஞ்சிடுவா போற...

சொல்லு தாத்தா

தாத்தாவுக்கு என்ன செய்தி கிடக்கு ராசா, எல்லாம் உன்னை பத்தி தான், உன் குடும்ப வாழ்க்கை பத்தி தான் கேட்கணும் ஒளிவுமறைவு இல்லாம சொல்லு.

என்ன தாத்தா சொல்லணும் ?

உன் மனசுல உருத்திக்கிட்டு கிடக்கே அதை சொல்லு.

என் மனசுல எதுவும் இல்லை தாத்தா.

ஏண்டா என்கிட்ட மறைக்கிற, உன்ன பெத்த அப்பனையே பெத்தவன்டா, ரெண்டு பேரோட வயசும், முகத்த பார்த்தே நீ எப்படிப் பட்ட வாழ்க்கைய வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்னு சொல்லுறவண்டா. உன் முகத்துல பொய்யான சிரிப்பு இருக்கே தவிர உன் மனசுல உண்மையான சந்தோசம் இல்லை. ஒரு வருசமா நானும் பார்க்குறேன் கிடந்தாலும் ரொம்ப சந்தோசமாதாண்டா நீயும், காயத்திரியும் இருந்தீங்க வாராவாரம் சினிமா, பார்க்-ன்னு அவள கூட்டிக்கிட்டு சுத்துவியே இப்ப உங்களுக்கு என்ன ஆச்சு?

பழைய மாதிரி உங்களுக்குள்ள அன்பான சண்டையும் இல்லை ,வெளியே எங்கயும் போறதும் இல்லை இவ்வளவு ஏன் ஒருத்தருக்கு ஒருத்தர் சாப்பிடும் போது கூட மனம் விட்டு பேசிக்கிறது இல்லை. உங்களுக்குள்ள என்ன தாண்டா ஆச்சு ?? எதுவும் இல்லைன்னு பொய் மட்டும் சொல்லாதே.

சொல்லுடா பேராண்டி, இந்த தாத்தாக் கிட்ட மனச திறந்து சொல்லு, உன் பிரச்சனையை உன் வயசால தீர்க்க முடியலைன்னாலும் என் அனுபவத்தால தீர்க்க முடியுதான்னு பார்க்குறேன். (தாத்தா அப்படி சொல்லவும் அசோக் தேம்பி, தேம்பி அழுகிறான்)

அழாதே ராசா எல்லாம் சரி யாகும், நீங்க பெத்து வச்சு இருக்கிற குழந்தைக்காகவாது நல்லபடியா சந்தோசமா நீங்க வாழணும். மனசுல எந்த குறை இருந்தாலும் தாத்தாக் கிட்ட சொல்லு ராசா.

நீங்க சொல்லுற மாதிரி நானும் காயத்ரியும் சந்தோஷமா தான் இருந்தோம் யாரு கண்ணு பட்டதோ எங்க வாழ்க்கை சின்னாபின்னமாகி நிக்குது தாத்தா, ஊரார்

பேச்சி கேட்டு கொண்டு விதண்டாவாதம் செஞ்சா காயத்திரி , முன் கோபத்தால நான் செய்யக் கூடாத சத்தியத்தை தெரியாம செஞ்சிட்டேன் தாத்தா. அதனால தான் எங்க தாம்பத்ய வாழ்க்கை மட்டுமல்லாது எங்க ஒட்டு மொத்த வாழ்க்கையும் கேள்விக்குறியாகி நிக்குது.

என்ன ராசா சொல்லுற ?

என்ன தான் எலியும் பூனையுமா அடிச்சுக்கிட்டாலும் இந்த உலகத்துலேயே ரொம்ப சந்தோசமா வாழ்ந்த ஜோடி நாங்க தான் ஆனா காயத்திரி தோழி சசிகலா சொன்ன தப்பான வழிகாட்டுதலால் தான் என் பொண்டாட்டி மனசு மாறி போச்சு தாத்தா .

இந்த ஆம்பளைங்க கிட்ட ரொம்ப சுதந்திரம் கொடுக்க கூடாதடி, அதுவும் தாம்பத்ய சுகத்துக்காக வரும் போது ரொம்ப பிகு பண்ணனும் ,கெஞ்ச விடணும் ஏன் சில நேரம் மாசக்கணக்குல அவங்களை பட்டினி போட்டா தான் நம்ம வழிக்கு வருவானுங்க அதனால அந்த விசயத்துக்கு ரொம்ப இடம் கொடுக்காதே, நிறைய அலையவிடுன்னு தப்பு, தப்பா ஐடியா கொடுத்து இருக்கா அந்த அறிவுகெட்ட சசிகலா, அத கேட்டிட்டு இவளும் என்னை ரொம்ப பாடாய் படுத்திட்டா தாத்தா, பல மாசம் சந்தோசமா இல்லாம தான் இருந்தோம்.

ஒரு நாள் என் தோஸ்த்து வடி வேலோட சேர்ந்து கொண்டு அது மாதிரியான தப்பான படம் பார்த்து விட்டு வீடு வந்தேன். அந்த படம் ஞாபகத்துலேயே அவகிட்ட சந்தோசமா இருக்கலாம்னு கூப்பிட்டேன். எப்போதும் போல வேணாம்னு திமிரா சொன்னா. வேறு வழியில்லாம கெஞ்சி பார்த்தேன் அதுக்கு முடியாதுன்னு சொன்னது மட்டுமில்லாம கோபத்துல கன்னத்துல அடிச்சிட்டா நானும் கோபத்துல இந்த ஜென்மத்துல எந்த நிலையிலும் உன்னை தொட மாட்டேன்டி; இது நாம்ம பெத்து வச்சு இருக்கிற புள்ள மேல சத்தியம்னு தெரியாத்தனமா சத்தியம் பண்ணிட்டேன் தாத்தா .

அவ எத்தனையோ தடவை மன்னிப்பு கேட்டாலும் புள்ள மேல பண்ண சத்தியத்துக்காக பயந்துக்கிட்டு நாங்க சேராம இருக்கோம் தாத்தா.

நான் பண்ணினதும் தப்பு, அவ பண்ணினதும் தப்பு ரெண்டு பேரும் எங்க தப்பை உணர்ந்திட்டோம் ஆனா சத்தியத்தை மீறி நானும் அவளும் சந்தோசமா இருந்தா எங்க புள்ளைக்கு ஏதாவது ஆயிடமோன்னு பயந்துக்கிட்டு நானும் அவளும் இப்படியே பேசாம, கூடாம வருஷக்கணக்குல இருக்கோம் தாத்தா.

அட கிறுக்கு பயலே இந்த சின்ன விசயத்துக்கு தான் வருஷக்கணக்குல உன் பொண்டாட்டிக் கூட பேசாம, கூடாம கிடந்தயாக்கும்.

அந்த மதுரைவீரன் சாமி கோயில்ல போய் மனதார மன்னிப்பு கேட்டிட்டு உப்பும், மிளகும் காணிக்கை கொடுத்திட்டு, நான் பண்ண சத்தியத்தை திரும்ப வாங்கிக்கிறேன் சாமின்னு வேண்டிட்டு வந்திட்டு உன் பொண்டாட்டி கூட சந்தோசமா வாழ வழிபாருடா படவா ,அந்த புள்ளைக்கு நானும் நல்ல புத்திய சொல்லிட்டு வந்திடுறேன்.

தாம்பத்யம் என்கிறது தன்னை நம்பி வந்தவங்களுக்கு பத்தியமா இருக்கிறது மட்டுமல்ல, ஒண்ணுக்கு ஒண்ணா ஒற்றுமையா, உசுருக்கு உசுரா நம்பிக்கையோடு எதையும் விட்டு கொடுத்து கண்ணியமா வாழணும். இதுக்கப்புறமாவது தப்பு, தப்பா சத்தியம் பண்ணிக்கிட்டு, விதண்டாவாதம் பண்ணிக்கிட்டு விலகி இருக்காம ஒற்றுமையா, அன்பா வாழுங் கடான்னு அறிவுரை மட்டும் வழங்காம ஜோடிகளிடம் பேசி சமரசம் செய்து விட்டு, இருபது ஆண்டுகளுக்கு முன்பே இறந்து போன தன் மனைவிக்கு திதி கொடுக்க ஆத்தங்கரை நோக்கி சென்றார் தாத்தா.

■



# இதுதாங்க வாழ்க்கை

**கவிஞர் கவி செல்வா**
என்கின்ற
**செல்வராணி**
*திருச்சி*

உடம்புல
உசுரு இல்லன்னா
நமக்கு வச்சப் பேர்
நமக்கு பயனில்லைங்க
பொணமுன்னு
பொசுக்குன்னு
பேர் வச்சிடுவாங்க

உணர்வுகளுக்கு
தீனிப் போட்டு
ஒன்னா சேர்ந்து
ஒன்பது மாதம் கழிச்சி
முட்டி மோதி
யோனியக் கிழிச்சி
வந்து விழும் ஒரு உயிர்
இதுதாங்க வாழ்க்கை

எத்தனை எத்தனையோ
போராட்டங்கள்
அவமானங்களில்
சிக்கி சின்னாப்பின்னமாகி
காதல் கல்யாணமுன்னு
பல இன்னல்களைத் தாண்டி
கூனி குறுகி
குடும்பத்துக்காக குட்டு வாங்கி
அவமானம் தாங்காம
தனியா நின்னு அழுவோமே
இதுதாங்க வாழ்க்கை

வயதான காலத்துல
வாய்க்கு வந்தபடி பேசுவாங்க
வாய மூடிக் கேட்டுக்கனும்
எல்லாம் தெரிந்த உன்னை
உனக்கு ஒன்னும் தெரியாது
வாய மூடு நீ எதுக்கு பேசுற?
கொஞ்சம் பேசாம இருக்கியான்னு
எல்லாரும் பேசுவாங்க

தாங்க முடியாம அடிவயிறு
தேம்பும் தோளுல கிடக்குற
துண்டை எடுத்து
கண்ண துடைச்சிக்கிட்டே
நகருவோம் பாருங்க
இதுதாங்க வாழ்க்கை

படுத்த படுக்கையில கிடந்து
மலஜலம் கழிச்சி
மறதி வந்து
என்னை யாருன்னு தெரியுதான்னு?
எல்லோரும் வந்து வந்து கேட்க
எதுவுமே தெரியாம
கண்ண மூடிடுவோம் பாருங்க
இதுதாங்க வாழ்க்கை

இடுகாட்டுக்கு எடுத்துப் போயி
கடைசியா ஒரு முறை
மூஞ்ச பார்க்குறவங்க பாருங்க
என்ற அந்த வார்த்தையில் தாங்க
முடியுது வாழ்க்கை

ஒருப்புடி சாம்பல் தானுங்க உடம்பு
உயிர் போனால் ஒன்னும் இல்லை
கோபப்பட்டு கொட்டாதீங்க வார்த்தைய
மகிழ்ச்சியா வாழ்ந்துட்டு போங்க
யாரும் ஏழை இல்லைங்க
எல்லோரும் மனிதர்கள் தான்
மதிக்க கத்துக்கங்க...

## ஏற்றமென நிறைந்தாய் எங்கும்

அன்பினால் அமர செய்து
அமைதியாய் தொண்டு செய்வார்
நன்பினால் குளிரச் செய்து
நன்மையை உவந்து செய்வார்
இன்பினை துளிர்க்கச் செய்து
என்றுமே வெற்றி காண்பார்
நன்றென நாளும் பெற்று
நயமிகு அய்யா வாழ்க



அயலகம் இருந்து வந்த
அன்புடை அய்யா வாழி
கயலென விழிகள் துள்ள
கவிதைகள் மொழிவேன் வாழி
நயமிகு சொற்கள் கொண்டே
நலம்மிகு பெற்று வாழி
கயம்நிறை குளிர்ந்த நீராய்
கருணையாய் நிறைந்தாய் வாழி

அயர்விலா உழைப்பைக் கொண்டாய்
அயலகம் விட்டே வந்தாய்
பயிலென ஆர்வம் தந்தாய்
பாங்குடன் வளர்த்தாய் சென்றாய்
துயிலென கொள்ளா உழைப்பில்
துடித்திடும் நாளும் உள்ளம்
எயிலென தமிழைக் காத்து
ஏற்றமென நிறைந்தாய் எங்கும்

பாங்குடன் ஆற்றும் செய்கை
பக்குவம் நிறைந்த மேன்மை
தாங்கிடும் உள்ளம் கொண்டு
தமிழென வந்து நிற்கும்
ஏங்கிடும் இவரின் தொண்டு
இன்பமாய் நிறையும் ஓங்கும்
தூங்கிடா நூல்கள் சொல்லும்
தோன்றிட வைக்கும் போற்றும்

**- தென்றல் கவி தமிழ்ச்சிட்டு**

## தமிழ்ப்பணி செய்யும் அமினார்

செந்தமிழ்ச் சிந்தை கொண்ட
சீர்த்தமிழ் அமினார் வாழி!
பைந்தமிழ் பருக என்றும்
பறவையாய்ப் பறப்பார் வானில்!
முந்தியே செயலில் கொள்வார்
முகர்தலில் இளைஞர் வேகம்!
தந்தருள் இறைவா என்றும்
தமிழென வாழும் வாழ்வே!

அருளொளி வீசும் கஃபா
அருள்நிறை அன்பைத் தூவ!
முருகனின் செவ்வேல் என்றும்
முகிலெனச் செழிப்பாய்க் காக்க!
வருடவே புதுவை மண்ணும்
வைகறை பிரான்சு தேடும்!
தரும்நிழல் அன்பே யாகும்
தரணியில் செழித்து வாழ்க!

தமிழ்ப்பணி செய்யும் அமினார்
தன்னெழில் நிலைத்தே வாழி!
அமிழ்தெனக் காலம் நீள
அவனியில் இனிதே வாழி!
நிமிர்ந்துமே நிற்கும் சோழர்
நினைவென எம்மில் வாழி!
திமிலுடன் சிலிர்க்கும் காளைத்
திடமுடன் அமினார் வாழி!

(க்ஃபாபா - மெக்காவில் உள்ள உலகி
லேயே பெரிய புனித பள்ளிவாசல் ஆகும்)

**- பால.தியாகராசன்,**
கோவை.



# தமிழ்நெஞ்ச(ம்)ன் வாழியவே!

[ நேரிசை வெண்பா ]

எங்கள் தமிழ்நெஞ்சன் இங்குதித்த நன்னாளைப்
பொங்கல் சுவையேந்திப் போற்றுகிறேன்! - திங்கள்
நலஞ்செழிக்க வாழ்த்துகிறேன்! நன்மலர்கள் கொண்டு
குலஞ்செழிக்க வாழ்த்துகிறேன் கோத்து!

[ அறுசீர் விருத்தம் ]

வண்ணம் மின்னும் வகையினிலே
வழங்கும் மின்னூல் திறன்கூறும்!
எண்ணம் மின்னும் வகையினிலே
எழுதும் ஆக்கம் சுவையூறும்!
திண்ணம் மின்னும் வகையினிலே
செய்யும் பணிகள் நலஞ்சூடும்!
தண்ணம் மின்னும் வகையினிலே
தழைத்து வாழ்க தமிழ்நெஞ்சன்!

முகநூல் உலகம் போற்றிடவே
முந்தி யாற்றும் செயல்கண்டேன்!
அகநூல் புறநூல் கவிதைகளில்
ஆழ்ந்து களிக்கும் உளங்கண்டேன்!
தகுநூல் பலவும் பதிப்பித்துத்
தாயைக் காக்கும் தகைகண்டேன்!
புகழ்நூல் பாடும் அணியாவும்
புனைந்து வாழ்க தமிழ்நெஞ்சன்!

எல்லாம் வல்ல இறையருளால்
இன்பம் யாவும் காணுகவே!
சொல்லாம் கலையுள் சிறப்புற்றுச்
சுடரும் மேன்மை பூணுகவே!
வில்லாம் அம்பின் கூர்மதியால்
வெற்றி மாலை சூடுகவே!
நெல்லாம் வயல்போல் நீடுலகில்
நிறைந்து வாழ்க தமிழ்நெஞ்சன்!


**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
கம்பன் கழகம் பிரான்சு
தொல்காப்பியர் கழகம் பிரான்சு

26.06.2020



# அகவைத் திருநாள் வாழ்த்து!

காட்டாற்று வெள்ளமெனக் கவிதை பொங்கும்!
நாட்டமுடன் சிறக்கச்செய்வீர் தமிழே எங்கும்!
தமிழுக்கெனத் தினம் துடிக்கின்ற நெஞ்சம்
அமிழ்தான தாய்மொழி உம்மிடத்தே துஞ்சும்
வாய்திறந்தால் வார்த்தைக் கில்லை பஞ்சம்
பாய்விரித்தீர் தமிழுக் கிட்டீர் மஞ்சம்!
அயலகத்தே மனம் விரும்பி வாழ்ந்தபோதும்
பயின்று வரும் உம்நாவில் செந்தமிழே!
தமிழ்நெஞ்சம் மின்னிதழால் தமிழ் வளர்க்கும்
அரும்பணி ஆற்றுகிற அமின னவரே...
அகவைத் திருநாளில் அகம்நிறைந்து வாழ்த்துகிறேன்!
தகவுடனே செம்மொழிபோல் வாழ்ந்திடுவீர்!
அமிழ்துண்ட தேவர் போலத் தமிழையுண்டு
தமிழ் வளர்ப்பீர் நலமுடனே பலநூறாண்டு!

**தமிழ்நெஞ்சம் வாழ்கவே...**

**- செல்லமுத்து பெரியசாமி**

# பிறந்தநாள் மங்கலப் பெருவாழ்த்து

சோர்வேதும் வாராமல் துன்பங்கள் சூழாமல்
ஆர்வம் குறையாமல் அன்பெனும் - ஆரமுதம்
தண்டமிழோடு உண்டு தழைத்தினிது வாழியரோ
அண்டமெலாம் போற்றும் அமின்.

என்றும் தமிழ்ச்சுற்றம் ஏத்திப் புகழ்பாட
மன்றமெலாம் அன்பே மணம்பொழிய - நன்றமைந்த
நன்னாளின் மங்கலங்கள் ஞாலம் உவந்துரைக்க
அன்புடனே வாழி அமின்.

தமிழன்பு ததும்புகிற தமிழ் நெஞ்சம் வாழ்க
தணியாத தமிழ்க்குரைத்தோம் நனிவாழ்க வாழ்க
அமைதி யுளம் பெருந்தன்மைதமிழ்க் கவிஞர்க்கெல்லாம்
அன்னைமடி யென்றுணர்த்தும் அமின்வாழ்க வாழ்க

**- அன்புவல்லி தங்கவேலன்**

# தமிழ்நெஞ்சம் அமின் வாழி

சோழநாட்டுப் பிள்ளையிவர்
சொக்கவைக்கும் கண்ணனிவர்
சோர்வில் லாமல்

வாழவைக்கும் தமிழ்த்தாயை
வளரவைக்கும் நல்விழுதாய்
வணங்கும் வேந்தர்

தோழமையாய் அனைவரையும்
தோள்கொடுத்தே அரவணைக்கும்
தொண்ட ராக

ஈழமென்றும் பரதமென்றும்
எவ்விதத்தும் பாகுபாட்டை
இழைக்கா நண்பர்!

மயிலையிலே பிறந்தாலும்
மாநகராம் பாரீசில்
மணக்கும் அன்பன்

அயிலழகை அல்லாவை
இயேசுவோடிங் கொன்றாக
அணைக்கும் நெஞ்சன்

குயிலழகைப் பாட்டினிலே
குவலயத்தின் ஏட்டினிலே
கொடுக்கும் அண்ணன்

மயிலழகின் வடிவெடுத்து
மயக்குகின்ற இதழ்வழியே
வழங்கும் திண்ணன்

தமிழ்நெஞ்சம் கொண்டவராம்
தன்னிகரோ அற்றவராம்
தழைத்தே ஓங்கி

அமிழ்துநிகர் தாய்மொழியை
அரவணைத்துத் தினமுயர்த்தும்
அண்ணல் எங்கள்

அமினாரின் பிறந்தநாளில்
ஆண்டவனார் அல்லாவின்
அருளைப் பெற்றே

இமிழ்திரைசூழ் புவிதனிலே
ஈடிணையே இல்லாது
வாழி வாழி

வங்கமெனும் பொங்குதிரை
கடலழகாய்க் காவியமாய்
வாழி வாழி

சங்கமதில் தவழ்ந்துவரும்
சன்மார்க்கத் தமிழ்த்தாயாய்
வாழி வாழி

சிங்கமெனச் சீர்மிகுந்து
சிறப்பெல்லாம் உடன்சேர
வாழி வாழி

செங்கதிராய் வெண்ணிலவாய்ச்
சிங்காரப் பேரெழிலாய்
வாழி வாழி

**இராம வேல்முருகன் வலங்கைமான்**





# சீர்கொண்டு வாழ்வாய்; சிறப்போடு இகிலத்தில்

■

ஆழக் கடல்தாண்டி அந்தமிழை நேசித்துக்
காழகம்போல் பூணிக் கவினுலகில் - நாழும்
நினையாமல் மின்னிதழில் நீள்படைப்பை ஏந்தும்
துணையானச் செந்தமிழின் தூண்..

■

தூண்கொண்ட மாளிகையாம்; துய்த்த இவர்நட்போ
வான்கொண்ட மாமழையாம்; வாழ்வெல்லாம் - நான்கொண்டப்
பால்வண்ண நெஞ்சோன்; பழுதில் குணமுடையோன்;
ஆல்கொண்ட நீழல் அவன்.

■

அவனமைதிப் பார்த்தால் அழகுநிலந் தோர்க்கும்
புவனமலர் பூசிடவே பூக்கும் - நவதளஞ்சேர்
பார்வதியாள் பெற்றமகன் பைந்தமிழைக் காப்பதுபோல்
யார்வையம் உள்ளார் இயம்பு?

■

இயம்புகின்ற சொல்லில் இளமையெலாம் கூடி
வயமாக்கும் விந்தை வளர்க்கும் - நயம்படவும்
வண்ணக் கணினி வரைபடத்தின் பூக்களிவன்
எண்ணத்தைக் காட்டும் இனித்து.

■

இனிப்பூட்டும் அன்புடையோன்; ஈற்றில்லா பண்பில்
பனிப்பூட்டி வைத்திருக்கும் பாலன்; - அணிப்பூட்டும்
பண்ணெல்லாம் நூலாக்கிப் பாவலர்கள் நெஞ்சோடு
வண்ணத்தைக் கூட்டிநிற்கும் வான்.

வாழ்த்தும் நெஞ்சம்

## ஏடி வரதராசன்

■

வான்கொண்ட விண்மீனாய் வார்த்தையெல்லாங் கோர்தெடுத்து
நாண்பூட்டும் அம்பின் நகலாவான் - கான்பூக்கும்
செம்மலரின் தோற்றமிவன் சிந்தை; அடடாஓ
அம்மலர்கள் வாடும் அறிந்து.

■

அறிந்தவைகள் எல்லாமும் ஆழக் கடலாம்;
எறிக்கலாம் கோபம்; இசைந்தால் - நெறிநீர்இம்
மண்ணாளும் வண்ணம் மனதாளும் சூட்சுமத்தில்
பொன்னும் பணிந்துநிற்கும் பொய்த்து.

■

பொய்யா மொழிவாழ்வைப் போழ்தும் இனித்தினித்து
மெய்யாய் ருசிக்கின்ற மேலாளன் - நெய்தைமேல்
ஆவலில்லா உள்ளத்தோன் அந்திநிலா சீதளத்தோன்
சீவகா ருண்யத்தின் சேர்ப்பு.

■

சேர்த்துவைத்தப் புண்ணியத்தில் சீரும் சிறப்போடு
நேர்த்தியுடன் வாழ்கின்ற நெக்குரோதம்; - மார்த்தாண்டம்
அன்னவொளி வீசி அகிலத்தில் நாளெல்லாம்
புன்னகைத்தே ஆடுகின்ற பூ.

■

பூக்கள் அணிதிரட்டிப் பூர தமிழ்ச்சுவையில்
பூக்களை வாழ்த்தும் பொறுப்பெனக்குப் - பாக்கள்ளாய்த்
தரமுடி யாவிடினும் தாள்பணிந்து இந்நாளில்
சேரட்டும் என்வாழ்த்துச் சீர்.

■

சீர்கொண்டு வாழ்வாய்; சிறப்போடு அகிலத்தில்
நேர்கொண்டு நாளும் நிமிர்ந்திடுவாய் - கார்கொண்ட
வான்மழையாய் எட்டெட்டும் வந்துமக்குச் சேர்வதற்கு
நான்வாழ்த்து கின்றேன் நகைத்து.

# தமிழ் நெஞ்சத்துக்கு ஒரு பாட்டு

**அம்பாளடியாள்**

நெஞ்சத்துக்கு ஒரு பாட்டு - தமிழ்
நெஞ்சத்துக்கு ஒரு பாட்டு
கண்ணிறைய தமிழி ருக்கு
கைகளிலும் தவழ்ந் திருக்கு

எட்டு வயசு பயணம் - அது
எட்ட வேணும் உசரம்
எட்டு வயசு பயணம் - அது
எட்ட வேணும் உசரம்

பட்டி தொட்டி எல்லாமும் - கை
தட்டும் வரம் தந்தானே!
எட்டி எங்கு போனாலும் - உன்ன
சுத்தி வர வச்சானே!

நீ தொடுத்த பத்திரிக்க - அது
சுண்டலோட நிக்கவில்லை!
மின் வலையில்
தொடர்ந்திருக்கும்
உன் கலைக்கு ஏது எல்லை!

ஆசைதீர விளையாடு - அட
ஆயுளுக்கும் வெற்றி நட போடு
பாரிசில தடை ஏது - என்றும்
பைந்தமிழ் தான் உன் வரலாறு

பூமியில தமிழ் வாழும் - மனம்
நூல்வடிவில் உனைக் காணும்
பாலமென இங்கி ருந்த
காலமெல்லாம் உனை வாழ்த்தும்
.

( நெஞ்சத்துக்கு )

# கற்பக வள்ளல் நீடு வாழி

அற்புதத் தமிழில் பேச்சும் !
அரும்பத மொழியிற் பாட்டும் !
உற்றவ ருறவோர் போலும் !
உணர்வுடன் நேசங் காட்டிக் !
குற்றமோ குறையோ இன்றிக்
குமரியாந் தமிழை ஏற்றுச்
சிற்பமே போலும் ஏட்டிற்
சிறப்புற வடிக்க வல்லார் !

சொற்பதம் போத வில்லை !
சொல்லிலே அடங்க வில்லை !
நற்செயல் நாளும் எண்ண
நறுமணம் பூக்கும் உள்ளம் !
பொற்பதத் தேவி வாணி
பொலிவிலே அமினார் நெஞ்சம் !
கற்பக வள்ளல் நீண்ட
காலமே வாழ வாழி !!



**கோகிலா ஜெயக்குமார்**
பிரான்சு

# அன்புக் களஞ்சியம் அமின்

தமிழே உன்றன் மலர்மஞ்சம்;
தரணி போற்றும் 'தமிழ்நெஞ்சம்'!
தமிழாய் இன்பத் தேன்கடலாய்
தழுவும் தென்றல் தரும்சுகமாய்
அமிழ்தாய் அன்புக் களஞ்சியமாய்
அழகு மொழியின் பெரும்புகழாய்
அமின்நீர் நீடு வாழியவே;
ஆழி போலே வாழியவே!

**- கவிஞர் தியாரூ**

# என்னகம் நிறைந்த நண்பர்



# 26.06

நன்னலம் கேட்கும் நண்பர்
  நயப்பட உரைக்கும் நண்பர்
தென்புலம் விட்டி ருந்தும்
  தீந்தமிழ் ஆளும் வேந்தர்
என்னகம் நிறைந்த நண்பர்
  எழிலாம் தமிழ் நெஞ்சத்தில்
மண்ணகம் இணைத்து வாழும்
  மாமணி வாழ்க!வாழ்க!!

அமின் பிறந்த நாளாம்
  அரியதோர் நன்னாள் இன்று
சமநோக்கு நாளு மின்றாய்
  சத்திய மேற்போம் ஒன்றாய்
தமதரும் வாழ்வில் தமிழை
  தழைக்கவே செய்யு மிந்த
நமதரும் நண்பர் நாமம்
  நாளுமே வாழ்க!வாழ்க!!

ஆண்டுகள் நூறும் தாண்டி
  அமையதோர் சிறந்த வாழ்வு
வேண்டினேன் அல்லாஹ் தன்னை
  விருப்பமே ஜெயத்தைக் காணும்
ஆண்டியான் முருகன் யேசு
  அவரது பாதந் தொட்டேன்
வேண்டுவ யாவும் பெற்று
  வெற்றியும் கொள்க வாழ்க!

**- பொன்மணிதாசன்**

கவிதைக் காரர்களை
இதமாய்
கரையேற்றும்
இலக்கியப்
பேரன்புத் தோணி.

“தமிழ் நெஞ்சம்”அமின்
ஐயா அவர்கள்
பன்னெடுங் காலம்
வளமுடனும் .
நலமுடனும் வாழ்ந்து
குடத்தினுள் இருக்கும்
அகல் விளக்குகளை
குன்றின் மேலேற்றி
வாழ்வாங்கு வாழ
வாழ்த்துகிறேன்..!!



**- ஜென்ஸி செல்வராஜ்**

## கடல்கடந்தும் தமிழ்ப்பணி செய்யும் நெஞ்சம் வாழி



தமிழுக்காக ஒரு நெஞ்சம் தமிழோடுதான் அது கொஞ்சும்
தமிழுறவோடு உறவாடி தமிழால் அது மிஞ்சும்
கவிதைகளை காதலிக்கும் நெஞ்சம்
கடல்கடந்தும் பணிசெய்து விஞ்சும் அந்த நெஞ்சம்
நம் தமிழோடு உறவாடி தரம்வாய்ந்த படைப்புத்தேடி
கெஞ்சும் அதனால் கொஞ்சும் அதன் பேர் தமிழ்நெஞ்ச(ம்)ன்
வாழிய வாழிய பல்லாண்டு வளமுடன் வாழ்க நலத்தோடு
உயிராக உறவாக தமிழாக வாழிய என்றும் பல்லாண்டு

**- கவிச்சிகரம் அ.முத்துவிஜயன்**

# ஊக்கத்தை உருவாக்கும் தமிழ்நெஞ்சம் அமின்

## வாழ்க வளமுடன்!

தித்திக்கும் தெள்ளமுதாய் எத்திக்கும் புகழ்மணக்கும்
நித்திலமாம் தமிழமுதே அமினென்னும் தமிழ்நெஞ்சன்.
வித்தகமாய் நெய்னாவும் ஃபாத்திமா அம்மாளும்
பெத்தெடுத்த பெருஞ்செல்வம் அமினென்னும் தமிழ்நெஞ்சன்

நற்றாமரைக் குளத்தினிலே நல்அன்னம் சேர்ந்தாற்போல்
உற்றநல் துணையாக நிசாவைநீர் கரம்பிடித்தீர்!
வற்றாத இன்பத்தின் ஊற்றாக உம்மக்கள்
நற்றமிழ்போல் ஃபரித்மாலிக் ரியாஜாவித் அனிஸ்சப்ரினா

சுற்றங்கள் சூழ்ந்திருக்க நண்பர்கள் வாழ்த்திசைக்க
பெற்றோர்கள். உமைவாழ்த்த பிறந்தநாள் காண்கின்றீர்!
சற்றேனும் ஓய்வின்றி உழைத்ததனால் உலகெங்கும்
பெரும்புகழைப் பெற்றுள்ளீர் நற்றமிழால் வாழ்த்துகிறேன்!

எண்ணங்கள் ஈடேற இனிப்பான வாழ்த்துக்கள்!
விண்ணமுதின் கார்முகிலே ஓவியமே தண்ணிலவே!
திண்ணியநல் நெஞ்சுடைய தமிழ்நெஞ்சன்!வாழியவே!
மண்மீதில்எந்நாளும் மாண்புடனே வாழியவே!

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டுகள்
பலகோடி நூறாக மக்கள்தம் உளம்புகுந்தே
எல்லோர்க்கும் ஊக்கத்தை உருவாக்கும் தமிழ்நெஞ்சன்
பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழியவே!

அன்புடன்

**இளமுனைவர்.வே.பூங்குழலிபெருமாள்**
தமிழ் விரிவுரையாளர்

# வேரை வைத்து விரிந்தநல் விருட்சம்

தடத்தினைத் தமிழர் நெஞ்சம் தாங்கவே புகழில் விஞ்சும்
இடத்தினைப் பெற்று விட்ட இனியநல் உண்மை மஞ்சம்
வடம்பிடித் திழுத்து வந்து வாழ்நிலை இலக்கியத் தேர்
இடம்பிடித் திருக்க வென்று இருக்கின்ற உள்ளம் வாழ்க!

வெளிநாட்டில் வேரை வைத்து விரிந்தநல் விருட்சம் எங்கும்
ஒளிவிடும் கவிஞர்க் கெல்லாம் உயிர் மூச்சாய் நிழல் கொடுக்கும்
களிகூட்டும் தமிழ்நெஞ்சத்தின் கனிவூட்டும் அரவணைப்பில்
வலுவூட்டும் படைப்பு ஆற்றல் வழிகாட்டும் மனத்தின் ஏற்றம்!

ஏற்றத்தைப் பெற்றி ருக்கும் இனியநல் சகோதரர்க்கோ
வேற்றுமை என்று இல்லை விரிமனம் இமய எல்லை
காற்றிருக் கின்ற காலம் கண்முன்னே இயற்கை வாழும்
சாட்சியாய் நூறாய் வாழ்க சக்தியாம் இறைய ருள்க!

கனிவான அன்புடன்
**கவிப்பேரொளி.**
**நீரை. அத்திப்பூ ( சே. அப்துல் லத்தீப் )**



# தமிழ்த்தொண்டர் அமின்

கடல் கடந்து வாழ்ந்திடினும் தமிழர்
தடம் பதித்த இடமெல்லாம் தானும்
படர்கின்ற வேராய்ப் பற்றித் தமிழைத்
திடமாகப் பரப்பி வரும் தமிழ்த்தொண்டர்
தமிழ்நெஞ்சம் பல்சுவை இதழ் தந்து
தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த அமின்
சகோதரர் ஆண்டு பல வாழியவே!

**ஓசூர் மணிமேகலை**

# இமயமாய் உயர்ந்து நிற்கிறாய்

தமிழன்னை வளர்த்த தமிழ்நெஞ்சமே
தமிழ்ப்புலமைகள் அனைத்தும் உன்னிடம் தஞ்சமே
அன்னைத்தமிழால் உனக்குப் பெருமை
அன்புத் தமிழ்நெஞ்சத்தால் தமிழுக்கே பெருமை

கட்டவிழும் கன்னித்தமிழ் கொண்டு
கவி புனைகிறாய் கவின்மிகு வரிகளோடு
அன்பென வருவோர்க்கெல்லாம் அமுதசுரபி நீ
ஆறுதல் தேடுவோர்க்கு அற்புத ஔடதமும் நீ

உன் அகக்கண்களெங்கும் அன்பின் ஊற்று
அழகிய வதனமெங்கும் அமைதியின் ஒளிக்கீற்று
பைந்தமிழின் ஈர்ப்பு உன்னுள் விசையேற்ற
பற்றுக் கொண்டோரை ஈர்க்கிறாய் தமிழ்த்தொண்டாற்ற

விடாமுயற்சியும்  பயிற்சியும் கொண்டு - உன்
வெற்றிக்கிட்டாய் உறுதியாய் அடித்தளம்
திறமையுள்ளோரை அரவணைத்து அமைத்துக்
கொடுத்தாய் அவர்கட்குச் சிறப்புக்களம்

எத்திசைப் பறவைகட்கும் வேடந்தாங்கலாய் நீ
எங்கும் நிழல் தேடியலைவோர்க்கும் பெருவிருட்சம் நீ
அடரிருளில் தொலைவோர்க்கு ஒளிவிளக்காய் நீ
கரைகாணா கவிஞர்க்கும் கலங்கரை விளக்காய் நீ

எட்டமுடியா இலக்குடையோரை ஏற்றிவிடும் ஏணியே
ஏங்கும் கலைஞரையும் கரை சேர்க்கும் தோணியே
அகில மெங்கும் போற்றும் ஞானியே
உன் அகத்தில் உறைகிறாள் கலைவாணியே

வெஞ்சொல் கேட்டால் அனிச்சமலராய் வாடுவாய்
வெறுப்பு துரோகம் கண்டால் தள்ளியே ஓடுவாய்
அன்பு கொள்வோர்க்கு நறுமலராய் வாழுவாய்
உயர்பண்புகளால் உலகையே ஆளுவாய்

மாயக்கண்ணனாய் வந்து மங்கையர் மனங்களில்
மெல்ல மெல்லத் தடம் பதிக்கிறாய்
மிடுக்காக வந்து உலாப் போகிறாய்
மிளிரும் (கவி) மார்க்கண்டேயனாய்

உன் நகக்கண்ணில் கூட கவி பூக்கும்
உன் சுவாசக்காற்றிலும் தமிழ் மணக்கும்
இந்த தரணியையே கட்டிப்போடும்
தனித் திறமைகள் உண்டு உனக்கும்

இயற்கையின் வனப்புகள் சந்தம் பாட
இன்னிசைக்குயிலோ உனக்குச் சிந்து பாடும்
விண்மீன்கள் கண்சிமிட்டிக் கவரி வீச
வெண்ணிலவோ உன் சிரசேறி மகுடமாகும்

அத்தனை மொழிகளிலும் தேடுகிறேனொரு வார்த்தை
உன் அன்புமொழிக்கீடாக வசப்படவில்லை ஏதும்
ஒருமையில் விளித்தாலும் உனை எப்போதும்
இமயமாய் உயர்ந்து நிற்கிறா யென்னுள்

முப்பத்து முக்கோடித் தேவர்கள் (வானவர்கள்)
உன்னாயுள் ரேகையில் காத்து நிற்க
நல்லோரின் ஆசிகளுனை வாழ்த்த
நலம் வாழ வேண்டுமென்றும் நீடூழி

– சித்தி வஃபீரா

# தமிழ்த்தொண்டன்
# அமினுள்ளம் தூயதாகும்



அலைபோல ஓய்வின்றித் தமிழ்ப்பணியை
ஆற்றுகின்ற தூய நெஞ்சர்
சிலைபோல நின்றிடாமல் சிந்தித்துச்
செந்தமிழைப் போற்று கின்ற
நிலைமாந்தர் அமின்தோழர் என்றறிந்து
நற்றமிழால் வாழ்த்து கின்றேன்
விலையில்லா தமிழ்நெஞ்சால் வாழ்கவென
வாழ்த்துகின்றேன் வாழ்க! வாழ்க!!

கதிர்முன்னர் தானெழுந்து கண்ணிமையாய்
கனிதமிழைக் காத்து வாழும்
புதிர்மாந்தர் அமின்நண்பர் எந்தநாளும்
பூப்போல மணம்ப ரப்பி
மதியோடு இவ்வுலகை சுற்றிவரும்
மாண்பாளர் அன்பு நெஞ்சர்
எதிரிகளே இல்லாமல் இயங்குகின்ற
எம்தோழர் வாழ்க! வாழ்க!!

தமிழ்நெஞ்சம் அமின்என்றால் எல்லோரும்
தடையின்றி அறிவார் இங்கே
தமிழ்த்தொண்டன் அமினுள்ளம் தூயதாகும்
தணல்போல மாசு இன்றி
அமிழ்தப்பணி ஆற்றுகின்றார் ஆற்றலோடு
அடிச்சுவட்டைப் பின்தொ டர்ந்து
விழுதாக வரலாறு படைக்கின்றார்
வீறுடனே எந்த நாளும்

**தமிழ்நெஞ்சன்**
புதுச்சேரி





பதினொரு வயதில் சுண்டல்
இதழை நடத்தியவர்...
தமிழின் தொண்டன்..
வெளிநாட்டில் வாழ்ந்தாலும்
தமிழ் மறவா தகையாளி...

என்றும் உங்கள் தமிழ்த்தொண்டு
சிறக்க வாழ்த்துகிறேன்..

**பெண்ணியம்**
**செல்வக்குமாரி**

வாழிய தமிழ்நெஞ்சம்
வருங்காலப்
புகழ் விஞ்சும் !

அதிகமான அன்புடன்
**அமுதபாரதி**



# நனிநன்றி

வாழ்த்து மலர்த்தேனுண்டேன் வண்டானேன் இந்நாளில்
காழ்த்த முதுமைக் கணக்கெல்லாம் தோன்றவில்லை
கோத்தெடுத்த முத்துப்போல் கொட்டி வைத்த வாழ்த்துகளைச்
சேர்த்தணிந்து கொண்டேன் திருவுடையீர் நனிநன்றி

26.06.2020

அன்புடன் தமிழ்நெஞ்சம் அமின்

# மரபுக் கவிஞர் அப்துல் முத்தலிப்

மண்ணில் : 17.09 1936 - விண்ணில் : 16.06.2020

# இரங்கற்பா



ஊற்றிடும் சந்தம் காதில்
உளம்வரை கேட்டுக் கேட்டு
காற்றினில் வாசம் உந்தன்
கானமாய் போன தையா
ஆற்றிய உன்றன் சேவை
அணிகளும் யறக்கா திங்கே
போற்றுதல் உன்னை மட்டும்
பொன்றிடா உவமை உண்டோ

தூவலோ உன்னைக் கேட்டு
துவங்கிடும் மையை ஊற்ற
பாவளம் உன்னைக் கேட்டுப்
பைந்தமிழ் சொல்லைக் கூட்டும்
காவலாய் மொழியை காக்கும்
கனிவுகள் நெஞ்சில் நிற்க
தாவறு நினைவால் உள்ளம்
தவிக்கிறோம் நாளெல் லாமும்

பொங்கிடும் அசைகள் உந்தன்
புகழினை காக்கும் எண்ணம்
தங்கிடும் பாடல் உந்தன்
தரத்தினை உயர்த்தி நிற்கும்
கங்கையை போலும் உந்தன்
கவிகளை நான்ப டிக்க
எங்கினி காண்போம் உன்போல்
எழிற்றமிழ் புலவன் தன்னை.

தமிழ்நெஞ்சம்

# முழு இரவும்..

## Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)

எது இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று கேட்டால் ஒவ்வொருவரும் வேறு வேறு பதில்களைச் சொல்வார்கள். ஆனால் எது இல்லாமல் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று கேட்டுப் பாருங்கள்... அதற்கான பதில் என்னவாக இருந்தாலும் அதன் மையமான பொருள் பிரச்னை என்பதாகத்தான் இருக்கும். அப்படியென்றால் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் பிரச்னை இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதானே பொருளாகிறது.



ஆனால்நடைமுறைவாழ்க்கையில் அது சாத்தியமானதா என்றால் நிச்சயமாக சாத்தியமில்லை என்பது நம் அனைவருக்குமே தெரியும்.

“ஓடிக்கொண்டே இருக்கிறேன்.. பல பிரச்னைகள். வீட்டில், தெருவில், ஊரில், வேலை செய்யும் இடத்தில் என எங்குமே பிரச்னைகள்.. தூங்கமுடியவில்லை.. பிரச்னைகளை தீர்த்து நான் நிம்மதியாக உறங்குவதற்கு எனக்கு ஒரு தீர்வு சொல்லுங்கள்” என்றவாறே அந்த மகானின் முன்பாக நின்றிருந்தார் அரேபிய நாட்டில் ஒட்டக பண்ணை வைத்திருக்கும் அந்த மனிதர்.

வந்த மனிதரிடம் மகான் இது ஒரு பெரிய விசயமே இல்லையே. இதற்கு மிக சுலபமான ஒரு தீர்வு இருக்கிறதே என்று சொன்னதும் வந்தவருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகி விட்டது. அடடா இந்த மகானை முன்பே சந்தித்திருக்கலாமே என்று எண்ணியபடி பிரச்னையை மறந்து உறங்கும் உபாயத்தைக் கூறும்படி கேட்கிறார். அதற்கு அந்த மகான் உன் பண்ணைக்கு சென்று அங்கு உள்ள ஒட்டகங்கள் எல்லாம் என்ன செய்து கொண்டு இருக்கின்றன என பார்த்துவிட்டு வா என்று கூறுகிறார்.

சென்றவர் திரும்பி வந்து எல்லா ஒட்டகங்களும்நின்றுகொண்டுஇருக்கின்றன என்று கூற, மகான் அவரிடம் நல்லது, அங்கு இருக்கும் எல்லா ஒட்டகங்களும் தரையில் உறங்கியவுடன் அங்கே இருக்கிற ஓய்வறையில் நீ படுத்து தூங்கு, நிம்மதியான உறக்கம் கிடைக்கும். பின் காலையில் எழுந்து இங்கு வா என்று கூறி அனுப்பி வைக்கிறார்.

பிரச்னைகளின் தொந்தரவின்றி தூங்குவது இத்தனை சுலபமானதா என்று எண்ணியபடி பண்ணைக்குச் சென்றவர் மறு நாள் கண்களில் தூக்கமின்றி களைப்புடன் திரும்பி வந்து, இரவு முழுவதும் தூங்கவே

இல்லை என்று கூறுகிறார்.

என்ன நடந்தது என்று விரிவாகச் சொல்லும்படி அந்த மகான் சொன்னதும் சில ஒட்டகங்கள் தானாகவே தரையில் படுத்துவிட்டன, சில ஒட்டகங்களை நான் மெனக்கெட்டு படுக்கவைத்தேன். அப்படி நான் ஒட்டகங்களை படுக்க வைக்கும்போது ஏற்கனவே படுத்துக் கொண்டிருந்த சில ஒட்டகங்கள் எழுந்து விட்டன. இப்படியே அனைத்தையும் படுக்க வைக்கும் முயற்சியிலேயே முழு இரவும் கழிந்து விட்டது. இருந்தும் என்னால் அனைத்து ஒட்டகங்களையும் மொத்தமாக படுக்க வைக்க முடியவில்லை என்று கவலையுடன் கூறுகிறார்..

அதைக் கேட்ட மகான் சிரித்தபடியே, இதுதான் வாழ்க்கை. வாழ்க்கையில் பிரச்னையை முடிப்பது என்பது ஒட்டகத்தை படுக்க வைப்பது போன்றது.. சில பிரச்சனைகள் தானாக முடிந்துவிடும்.. சிலவற்றை நாம் மெனக்கெட்டு முடித்துவிடலாம்.. ஆனால் சில பிரச்னைகள் முடிந்தால் வேறு சில பிரச்சினைகள் புதிதாக எழலாம்... அனைத்து பிரச்சினையும் முடிந்தால்தான் நிம்மதியாக தூங்குவேன் என்றால் இந்த உலகத்தில் யாராலும் தூங்கமுடியாது.. ஒட்டகங்கள் அனைத்தும் படுத்த பிறகு உறங்கலாம் என்று நினைக்காமல் உனக்கான ஓய்வறையில் நிம்மதியாக இருக்க கற்றுக்கொள் என்று சொல்கிறார்.

வாழ்வில் பிரச்சினைகள் என்பது ஒட்டகப் பண்ணையில் இருக்கும் ஒட்டகங்கள் போல்தான். அவற்றிற்கான நேரம் வரும்போது அவை தானாகவே உறங்கி விடும். அனைத்தும் உறங்கக் காத்திருக்காமல் உங்களுக்கான காலவரையறைக்குள் அவற்றைத் தீர்க்கும் முயற்சியை மட்டும் செய்து விட்டு உங்கள் வாழ்க்கையை வாழ்வதுதான் வாழ்வில் நிம்மதியைத் தரும்.

பொதுவாகவே பிரச்னைகளை விட அதில் கலந்திருக்கும் உணர்வுகள்தான் மகிழ்ச்சியை பறிக்கின்றது. அந்த உணர்வுகளை அழிக்க முடியாவிட்டாலும் அதை உங்கள் மனதில் இருந்து வேறு ஒரு பொருளுக்கு கடத்தி விட்டால் அந்த பிரச்னைகள் தீரும்வரை அதன் பாரத்தை சுமக்க வேண்டி இருக்காது. அதன் காரணமாக வாழ்வின் நிகழ்வுகளை நீங்கள் மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம். அந்த மகிழ்ச்சியான மன நிலையே பெரும்பாலான பிரச்னைகளுக்கு தீர்வுகளையும் கொண்டு வந்து சேர்த்து விடும்.

உணர்வுகளை எப்படி வேறு பொருட்களுக்கு கடத்த முடியும் என்று கேட்கு முன் ஒரு சிறு நிகழ்வைக் கற்பனை



# அவள் என்பவள்!

ஞாபகங்களின் பொக்கிஷம்

தேன் நிரம்புமளவில் பிரியத்திற்குரியவள்

வழியும் அன்பின் ஊதுபத்தி

சலிப்படையா சாலைகளின் நிறைவுகள்

பிரகாசத்தின் பார்வை

பனிப்பழத்தின் குரல்வீச்சு

முத்தமிடும் சின்ன இதழ்

மிதந்திடும் வண்ணக்கனவு

இமை சரியும் இதம்

தாரை வார்க்கும் தவிப்புகளின் நிசப்தம்

பிரியும் நேரத்துப் பரிதவிப்பின் இன்முகம்

செய்து பாருங்கள்.

உங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு நண்பர் உங்கள் பிறந்த நாளன்று ஒரு வாழ்த்து அட்டை தருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதை நீங்கள் மிகவும் பத்திரமாக, பொக்கிஷமாக பாதுகாக்க நினைத்துக் கொண்டிருக்கும்போது அதன் மேல் டீயோ காபியோ கொட்டி அந்த வாழ்த்து அட்டை பாழாகி விட்டால் உங்களுக்கு எப்படி இருக்கும்? ஒரு சாதாரண வாழ்த்து அட்டைதானே, போனால் போகட்டும் என்று உங்களால் அதைச் சாதாரணமாக கடந்து விட முடியுமா?

அந்த நேரம் உங்கள் மனதில் எழும்



பிற்பாடு ஆழ்ந்த பெரும் மயக்கம்

வியப்பில் ஆழ்த்தும் ஒற்றைச்சொல்

அமானுஷ்யத்தின் மொத்த அரங்கேற்றம்

தென்றலின் மென் தீண்டல்

ஆக்கிரமிப்புகளின் அதிகப்பட்ச இரக்கம்

பூரணத்துவ மதுவிலக்கு

காதல் இறகு

செழித்திருக்கும் நெய்தல் பூக்கள்

உழைப்பின் உன்னத பெருமை

புன்னகைகளின் சாளரம்!

- ஆனந்தி ராமகிருஷ்ணன்
வடலூர்.

வலி அந்த அட்டையின் விலைக்காகவோ தரத்துக்காகவோ ஏற்பட்டதா? அது அந்த வாழ்த்து அட்டையை தந்தவரின் உணர்வுகளைச் சுமந்து வந்ததாலும் அந்த உணர்வுகள் சேதப்பட்டு விட்டதே என்பதாலும் ஏற்பட்ட வலிதானே.

அது அன்பளிப்பாக இல்லாமல் நீங்கள் கடையில் இருந்து வாங்கி இருந்தால் அதுவும் மற்ற பொருள்களைப் போல் சாதாரணமான ஒன்றாக, சேதமடைந்தால் மீண்டும் வாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு பொருளாக இருந்திருக்கும். ஆனால் அன்பளிப்பாக கொடுத்ததால் அது விலை மதிப்பற்றதாக ஒரு பொக்கிஷமாகப் படுகிறது. அந்த காகிதம் உங்களுக்குப் பரிசளித்தவரின் உணர்வுகளைச் சுமந்து வருகிறது. அந்த உணர்வுகள் உங்கள் மனதிற்குள் கடத்தப் படுகிறது. அதனால் தான் அதற்கு ஒரு சேதம் என்றதும் ஏதோ ஒன்று உங்கள் மனதிலிருந்தே உடைந்தது போல் மனமெங்கும் வலி சூழ்கிறது. எந்தப் பொருளின் மதிப்பும் அதில் கலந்துள்ள உணர்வுகளாலேயே நிர்ணயிக்கப் படுகிறது. அது நல்ல மனநிலையில் நல்ல நட்பால் தரப் பட்டதால் அதில் நல்ல உணர்வுகள் கலந்திருப்பதாக நினைத்து அதை பொக்கிஷமாக பாதுகாக்க நினைக்கிறீர்கள்.

அதுபோலத்தான் பிரச்னைகளுடன் பிணைந்துள்ள உணர்வுகளையும் உங்களால் வேறு பொருட்களுக்கு கடத்த முடியும்.

உதாரணமாக எப்படி அன்பான உணர்வுகளை அன்பளிப்பாக ஒரு பொருளில் தரமுடிகிறதோ அது போல இந்த எதிர்மறை எண்ணங்களையும் மனதை அழுத்தும் பிரச்னைகளையும் ஒரு பேப்பர் பேனா எடுத்து உங்கள் மனதில் தோன்றுமாறு அப்படியே அதில் எழுதுங்கள்.

சில நேரம் யாராவது அவர்களுடைய பிரச்னைகளை உங்களிடம் சொல்லி விட்டு போனால் நீங்கள் எப்படி உணர்வீர்கள்.. அவர்கள் பிரச்னைகளை எல்லாம்

# கவிதை



நீ
வண்ணத்துப்பூச்சி
கேட்கும் போதெல்லாம்
நனைந்து விடுகிறேன்
மகரந்தப் புன்னகையில்.

நீ பரிசாய் தந்த
தேநீர் கோப்பையில்
நிரம்பி வழிகிறது
காதல்.

நீ மழை
நான் கடல்
எவ்வளவு பொழிந்தாலும்
உள்வாங்கிக் கொள்வேன்
அன்பை.

சிம்பொனி
இசையை விட
ரசனையானது
உன் முத்தங்களின் சத்தம்.

நடுநிசி கடந்தும்
விழித்திருக்கிறேன்
காற்றில் தவழ்ந்து வரும்
உன் சுவாசத்தில்
உயிர் பருக.

தெரிந்தே
தோற்று விடுவது கூட
ஒரு சுகம் தான்
உன்னிடம் மட்டும்.

**- நந்தவனம் சந்திரசேகரன்**
திருச்சி

உங்களிம் ஏற்றி விட்டு போய் விட்டதாக அழுத்தமாக உணர்வீர்கள் தானே. அது போல் உங்களுடைய பிரச்னைகளை ஒரு பேப்பரிடம் சொல்லி இறக்கி வைப்பதாக எண்ணி உங்களை வருத்தும் உணர்வுகளை எழுத்தின் மூலம் அதில் கொட்டுங்கள்.

உங்கள் பிரச்னையின் ஆழத்தைப் பொறுத்தும் மன அழுத்தத்தை பொறுத்தும் எத்தனை முறை எழுத வேண்டுமோ அத்தனை முறை எழுதுங்கள். சிலது ஒரு முறை எழுதுவதோடு மனப்பாரம் மறைந்து விட்டது போல் இருக்கும் சில நேரம் ஒவ்வொரு முறையும் எழுத எழுதக் குறைவது போல் இருக்கும் சிலமுறை எழுதுவதோடு அந்த அழுத்தம் உணர்ச்சிகள் மறைந்து விடும். எதிர்மறை உணர்ச்சிகள் மறைந்து விட்டால், நடந்த நிகழ்வுகள் நேர்மறையாக மனதில் பின் நிலை பெறும்.

இது ஏதோ நீங்கள் பிரச்சினைகளை சும்மா எழுதி பார்க்கிறீர்கள் என்று அர்த்தம் இல்லை. இது நீங்கள் அந்த வருத்தும் உணர்வுகளை அந்த பேப்பருக்கு எழுதும் உங்கள் கைகள் மூலமாக மாற்றி விடுகிறீர்கள். இப்போது அந்த பேப்பரை நன்றாக சுருட்டி அதை தீயில் போட்டு எரிக்கவோ அல்லது சுக்குநூறாக கிழிக்கவோ செய்யுங்கள். அன்பளிப்பு உடையும் போது நல்ல உணர்வுகள் உடைந்து விட்டதாக மனம் வருந்தியது போல் இப்போது உங்கள் எதிர்மறை உணர்வுகள் உங்களை விட்டும் நீங்கி விட்டதாக மனம் நிதானம் பெறும். தவிர எழுதும் போது உங்கள் லாஜிக்கல் பிரைன் ஆக்டிவேட் ஆகிறது அதனால் அதிலுள்ள எமோஷன் நீங்கி பிரச்னைக்கான லாஜிக்கான தீர்வுகள் உங்களுக்கு தோன்றக் கூடும்.

அது எப்படி என்று நம்ப முடியாமல் இருக்கலாம். ஆனால் அதை நம்பிக்கையுடன் நீங்கள் செய்வதில் தான் உங்கள் பிரச்னைக்கான எளிய தீர்வு இருக்கிறது.

# கவிதைக் களம்



உடை
மாற்றும் நேரம்
உன்னை நீ
ரசித்ததுண்டா?

கண்ணாடி
முன் நின்று
கண்ணீர்
வடித்ததுண்டா?

எதையோ
நினைத்து
யாரும் பார்க்காமல்
எப்போதாவது
சிரித்ததுண்டா?

கடந்து வந்த
இடத்தை
மறந்து
வியந்ததுண்டா?

தலையணை
அடியில்
தைலம் வைத்துப்
படுத்ததுண்டா?

அழைக்காத
கைப்பேசியை
அவ்வப்போது
எடுத்து எடுத்துப்
பார்த்ததுண்டா?

குறுஞ்செய்தி
அனுப்பி விட்டு
குலை நடுங்கி
போனதுண்டா?

கைப்பேசி
காணாமல்
கண் கலங்கி
நின்றதுண்டா?

தொடர்பு கொள்ள
முடியாமல்
துவண்டு நீயும்
போனதுண்டா?

ஏதேனும்
ஒரு பொருளை
உற்றுப் பார்த்து
நின்றதுண்டா?

இவை எதுவுமே
உனக்கு
தெரிய வில்லை
அனுபவிக்க வில்லை
யெனில் ...
என் காதல் மட்டும்
உனக்கு எங்கே
தெரியப் போகிறது ?
அட....ப். .....போடா.

கவிஞர் கவிசெல்வா என்கிற
**செல்வராணி**
திருச்சி .

அசாத்தியங்களை
சாத்தியங்களாக மாற்றும்
வல்லமை மிகுந்த
வார்த்தைகள் அவளிடம் மட்டுமே
பிறப்பெடுக்கும்.

வலி சுமந்த தோள்கள்
இரத்தமும் சதையுமாக
பிணைந்த தொப்புள்கொடி
மார்பிலும், காலிலும் நீ பாடிய
தாலாட்டுகள் நான்.

அவன்
உதைத்த போது வலிக்காத வலி
அநாதையாக ஆசிரமத்தில்
சேர்ந்தபோது
வலித்தது !

ஈழபாரதி
பிரான்ஸ்

# முகங்கள்



- மனோபாரதி

அவன் ஊரிலிருந்து ஒரு மைல் தொலைவிலிருக்கிறது அந்த செங்கல் சூலை. கிராமபுறங்களில் 'காலா' என்று அழைப்பது வழக்கம். 'காலா' வேலை செய்வதென்பது அவ்வளவு எளிதல்ல. பார்ப்பதற்கு எளிதாக இருப்பது போல் தான் இருக்கும். ஆனால் நேரமாக நேரமாக முதுகுவலி கண்டுவிடும். வேலை முடித்துவிட்டு ஒரு 'கோட்டர்' உள்ளே தள்ளினால் தான் உடம்புவலி குறைந்தது போல் உணர்வு உள்ளுக்குள். உடல் சுகமில்லை என்றால் மாத்திரை போட்டு குணமடைவதில்லை. அது போல் தான் சாராயமும் 'காலா' வேலை செய்பவர்களுக்கு.

சூலையின் எதிர்ப்புறம் சுடுகாடு. ஆள் நடமாட்டம் இல்லாது 'ஒ'வென்று இருக்கும். இதற்கு நடுவே தான் ஒரு மணி நேரத்திற்கு ஒரேயொரு பேருந்து ஒடும் சாலை. இரவு நேரங்களில் அந்த இடத்தை கடப்பவர்கள் பயத்தில் எச்சில் முழுங்கி கொண்டு தான் போவார்கள். தவளையின் சத்தமும், நரியின் ஊளையும் பயத்தை கிளப்புவது சாதரண விஷயம் தான். மனிதர்கள் மனிதர்களை பார்த்து பயப்படுவது போல், கண்ணில் புலப்படாத விஷயங்களை கண்டு பயப்படுவதும் இயல்பு தானே.

சூலையை ஒட்டினாற் போல் வாய்க்கால் அமைந்திருக்கிறது. வாய்க்காலின் விளிம்பைப் பார்த்து கொண்டே, பழமை யானது என்று கண்டுபிடித்துவிடலாம். வாய்க்கால் நீர்தான் சூலையின் முதலீடு, வரவு, தீனி எல்லாம். சூலையை சுற்றிலும் கருவமரங்கள். மேற்கே இருக்கிற கருவமர மூலையில், ஒரு ஓலை குடிசை.

அந்த செங்கல் சூலையை தான், உறவினர் ஒருவரிடமிருந்து கடன் வாங்கி ஒரு வருட குத்தகைக்கு எடுத்திருக்கிறார் சங்கிலி. தனது மகளை எப்படியாவது, அறுபது ஆயிரம் கொடுத்து சம்மந்தி வீட்டில் மகளை அனுப்பி வைத்துவிட வேண்டும். அவர்கள் சேர்த்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் கேட்ட அறுபது ஆயிரத்தை 'இந்தாய்யா நீ கேட்ட பிச்ச காசு' என்று அவர்கள் முகத்தில் வீசியெறிய வேண்டும் என்ற வைராக்கியம் சங்கிலி மனசுக்குள். எந்த மனிதருக்கு இல்லை வைராக்கியம்?. சில குணாதியசங்கள் மனிதர்களுக்கு மட்டும்தான். ஒவ்வொன்றும் வெவ்வேறு மாதிரியானவை. அவைகளை ஒப்பிடுவது மிக கடிது. இது தான் மனிதர்களின் 'பிரளயம்' கிளப்பும் மாபெரும் முரண்பாடு. இதற்குள் தான் நடக்கிறது 'நீயா? நானா?' போட்டி.

காலாவிற்கு, காலை ஒன்பது மணிக் கெல்லாம் வந்துவிடுவார்கள் சங்கிலியும்

அவரது அண்ணன் மகன் கோபாலும். கோபாலை அவரது சித்தப்பா தான் வளர்த்தார் என்ற நன்றியுணர்வு கோபாலுக்கும் அவனது குடும்பத்திற்கும் எப்போதும் உண்டு.

சூலைக்கு வந்தவுடன், 'நீ தண்ணி வூத்து, நான் மண்ணு குழைக்கிறேன்' என்று ஒப்பந்தம் செய்துகொண்டு தான் வேலை செய்ய ஆரம்பிப்பார்கள் இருவரும். கோபால் அதிகபட்சம் வாய்க்காலிலிருந்து நீர் கொண்டு வருவதில் தான் தீவிரமாய் இருப்பான். அந்த செம்மண்ணில் தண்ணிரின் ஈரம் பட்டவுடன், குழைக்க ஆரம்பித்து விட வேண்டியது தான். மேகத்தில் சூரிய ஒளிப்பட்டு ஒரு நிறம் வருமே, அந்த நிறத்திற்கு 'கொழ கொழ'வென்று வந்து விடும் அந்த மண். அது தான் அவர்களுக்கு 'காலா' அறுக்க சரியான பதம்.

குழைத்த சாந்தை கைவண்டியில் எடுத்துவைத்து காலா அறுக்க இலகுவான இடம் பார்த்து கல்லறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். இருவரும் சேர்ந்து தான் இரண்டு மாதமாய் கல்லறுக்கிறார்கள். வேலை செய்கிற போது ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்வதில்லை இருவரும். மதியம் சாப்பிட போகிற போது தான் பேசிக் கொள்வார்கள். மாலை ஆறு, ஆறரை வரை வேலை நடுக்கும். வேலை முடிந்தவுடன், சைக்கிளை சாராய கடைக்கு தான் விடுவார்கள். குடித்துவிட்டால், மகனும் சித்தப்பாவும் பாசத்தில் திளைத்துவிடுவார்கள்.

"யப்பா, காலா கல்ல வித்து வர்ற காச, முதல்ல ஆச்சி வீட்டுக்கு தூக்கியெறியனும். எம்புட்டு கேவலமா நம்ம குடும்பத்த பத்தி பேசிப்புட்டாங்க. அந்த குடும்பத்துக்கு பணத்தை கொடுத்து, செருப்படி கொடுக்கனும்பா. அப்ப தான் இந்த உடம்பு வலி எல்லாம் உண்மையா ஆறும்."

"நீ கவலப்படாதடா மவனே, அவங்க மூஞ்சில பணத்த தூக்கியெறிஞ்சுட்டு. அவங்க சொன்ன வார்த்தைய அவங்களுக்கே சொல்லி காட்டுவோம். அப்ப தான் ஊரு அவங்க காறித் துப்பும். கேக்க கூடாத வார்த்தயெல்லாம் கேட்டுடாங்க நம்மல."

"சரி வுடுப்பா. சமயம் வரும் போது வேட்டு வச்சிக்குவோம். எல்லாத்தையும்



ஒருத்தன் பாத்துகிட்டு தான் இருக்கான்.''

ஒருவர் கோபப் படும்போது, மற்றொருவர் ஆறுதல் கூறுவதும். பிறகு இன்னொருவர் கோபப் படுவது தான் இவர்களது வழக்கம்.

இதே கதை தான் சைக்கிளில் சாராயாக்கடையிலிருந்து வீட்டுக்கு வருகிற வரை. கோபால் சைக்கிள் ஓட்ட, சங்கிலி பின் கேரியரில் உட்கார்ந்து கொண்டு ஊர் கதையெல்லாம் பேசிக்கொண்டே வருவார். கோபாலும் சலிப்பில்லாமல் 'உம்' போட்டுக் கொண்டு வருவான்.

சைக்கிள் வீட்டு முற்றத்தில் நின்றது. கோபால் 'போயிட்டு வரேன்' என்பது போல் விடை கொடுத்து போய்விட்டான். சங்கிலியின் ஏப்ப(ம்) சத்தத்தைக் கேட்டு, இரு பேர குழந்தைகளும் 'ஐயா' என்று ஓடி வந்து தோள் மேல் ஏறினர். சங்கலியும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான். அவன் கையிலிருந்த தீனியுள்ள அந்த பாலீதின் பையை அவர்களுக்கு கொடுத்தான். முகம் முழுக்க சந்தோசம். ஏதோ பொக்கிஷத்தை வாங்குவது போல் அந்த பையை எடுத்து கொண்டு வீட்டிற்குள் சத்தம் போட்டு கொண்டு நுழைந்தனர்.

வீட்டில்நுழைந்ததும்அவன்மனைவி இருக்கும் அறைக்கு சென்றான். பல நாள் உடல் சுகமில்லாமல் படுத்தபடுக்கையாய் மனைவி கட்டிலில் கிடந்தாள் .

''உடம்பு இப்போ எப்புடி இருக்கு? இன்னும் வயிறு வலிச்சுக்கிட்டு தான் இருக்கா?''

''முன்னய விட இப்போ பரவாயில்ல. ஆனா இந்த வயிறு தான் இன்னும் ஏதோ கொடையறா மாறியே இருக்கு.''

''நாலாமக்காநாலுடாக்டரஇன்னொரு முற போயி பாத்துட்டு வந்துருவோம். அந்த சிட்ட எங்கேயும் தொலச்சிபுடாத.''

''உம்'' என்று தலையாட்டினாள்.

''சம்மந்தி வீட்டிலேருந்து வந்துட்டு போனாங்க...''

இந்த வாக்கியத்தை சொல்லி முடிப்பதற்குள் வயிறு வலிப்பது போல் தோன்றியது. வயிறு குடைச்சலால் வாயிலிருந்து வருகிற வார்த்தை தொண்டை வழியாக அடைத்தது. நாவை வெளியே தள்ளி கொண்டே இருமினாள்.

இதை புரிந்து கொண்ட சங்கிலி: ''சரி, சரி நான் ஜோதிய கேட்டுகிறன். நீ படுத்து உறங்கு'' என்று சொல்லிவிட்டு கொள்ளை வாசலுக்கு சென்றான்.

ஜோதி சமைப்பதில் தீவிரமாய் இருந் தாள். நறுக்கிய வாழைக்காய் துண்டுகளை, கொதித்துக் கொண்டிருந்த குழம்பு சட்டியில் போட்டாள். அவள் கண் கலங்கியிருந்ததை சங்கிலி பார்க்க தவறவில்லை.

''வாங்கப்பா, அண்ணன் எங்க? வீட்டுக்கு போயிட்டா? சாப்பிட கூப்பிட்டு வர வேண்டியது தானா?''

''இல்லம்மா, புள்ளய சாப்பிட கூப்பிடறத்துகுள்ள, 'வரேன்'னு சொல் லிட்டு போயிட்டான். என்னம்மா, உங்க அம்மா ஏதோ சொன்னா?''

''என்னதுப்பா?''

''மாமா வீட்டுக்கு வந்தாராம்மே? என்ன சேதியாம்?''

''ஆமாப்பா, மாமா வந்துச்சு. அவங்க கேட்ட அறுபது ஆயிரத்தை சீக்கிரம் தர சொன்னாங்கப்பா. இல்லனா, மச்சானுக்கு வேற ஒரு பொண்ண பாத்து கல்யாணம் பண்ணி வச்சிருவாங்களாம்.''

இதை சொல்லும் போது ஜோதியின் தொண்டை கரகரத்தது. கண்கள் கூட இலேசாக கலங்கியது. அவள் வாழ்க்கை யாயிற்றே?

''இது என்ன அக்குரும்பா இருக்கு. நான்தான் ஏற்கனவே கொஞ்ச தேதிக்குள்ள தரண்ணு சொல்லிருக்கன். இப்போ என்னானா திரும்பவும் குடச்சல் தர்றான்ங்க உங்க வீட்ல. வேரு சும்மாயிருந்தாலும், தழ சும்மாயிருக்காதுனு சொல்வாங்க. அது உனக்கு தான் பொறுத்தமா இருக்கு''

''என்னப்பா பண்றது. எல்லாம்

என் தலவிதி. நான் தானே சாக்கடய தேடி போனே. இப்போ உடம்பு நாறுதுண்ணு சொல்லி என்ன ஆக போகுது. எனக்கு இந்த கதி தேவதான்ப்பா.''

''ஏன்ம்மா நீ வேற, முடிஞ்சு போன பழய விஷயத்தயெல்லாம் முடிச்சு அவுக்கிற. ஆனது ஆகி போச்சு. இப்போ கவல பட்டு என்ன ஆகப் போகுது.''

'' ''

''சரிம்மா, நான் காத்தால போயி உங்க வீட்ல சொல்லிட்டு வந்திடுறேன்.''

''என்னானு சொல்ல போறிங்க?''

''இன்னும் இருபது நாள்ல கொடுத் துறன்னு.''

''அதுக்குள்ள எப்புடிப்பா பணம் புரட்டுவிங்க?''

''கல்லு சுடுறதுக்கு முன்னாடியே, ஆளுக அட்வான்ஸ் கொடுக்க ஆரம்பி சுடுவாங்க.. பாத்துக்கலாம்''

ஜோதி 'சரி' என்பது போல் பார்த்தாள். கொள்ளைப் புறத்தில் விளை யாடிக் கொண்டிருந்த பேரப் பிள்ளைகளை சாப்பிடகூப்பிட்டார்.சாப்பிட்டுமுடிந்ததும், கட்டிலை வீட்டு வாசலில் வைத்து, உறங்க ஆயத்தமானார். ஏனோ தூக்கம் வரவில்லை. மனமுழுக்க ஏதோ குற்றம் செய்த உணர்வு. தன் மகளின் வாழ்க்கை பறிபோன உணர்வு. 'அது சரி, நானா கல்யாணம் செய்துவைத்தேன். அவள் வாழ்க்கையே அவளே முடிவெடுத்தாள். இப்போது சிரமப்படுகிறாள். எல்லாம் அவள் தலையெழுத்து. நாமும் கொஞ்சம் கண்டித்திருக்கலாம்.'

எதிர்மறை கேள்விகள் அவனை இரவு முழுவதும் பிழிந்தெடுத்தன. பசலை ஆட்கொள்ளும் பாவை போல், இரவு அவனைதுன்பப்படுத்தியது.வாழ்க்கையை தொலைத்தது போல் ஒர் பதைபதைப்பு.



# மணமாலை வாராதோ

பூவாய் பூத்துக் குலுங்கி நிற்கிறேன்,
புன்னகை செய்தே முகம் மலர்கிறேன்,
தேன் குடிக்கும் வண்டுகள் தேடுவதில்லையே,
தோள் சாய தென்றல் வருவதில்லையே!

நிலவோடு மேகம் மோகம் கொள்கிறது,
நினைவோடு நித்திரை யுத்தம் செய்கிறது,
தனிமை கொன்று தாங்கிடவே எவருமில்லையே!
வெறுமை நீக்கிட புதுமை இல்லையே,

காதல் என்ற புனிதம் காணாமல் போனதோ,
காசுக்காக உலகம் தினம் சுழல்கிறதோ,
அன்பைத் தொலைத்து வாழும் கூட்டத்திலே,
மணமாலை சூட்ட யாரும் இல்லையோ,

ஏழ்மை என்பது ஏமாற்றத்தின் வடிவமா,
ஏங்கிடும் என் நெஞ்சம் குளிர்ந்திடுமா,
மலர்மாலை என் கழுத்தில் விழுந்திடுமா,
மஞ்சத்தில் என் மயக்கம் களைந்திடுமா!

**பட்டுக்கோட்டை பாலு**

பொழுது விடிவதற்குள், சம்மந்தி வீட்டிற்கு சென்றுவிட்டார் சங்கிலி. வீட்டில் ஜோதியின் மாமா மட்டும் தான் இருந்தார். சங்கிலியை பார்த்தவுடன் 'வா' என்று கூட அழைக்கவில்லை. தலையை மட்டும் ஆட்டினார்.

«வீட்டுக்கு வந்தீங்களாமே, மக சொன்னா» என்றார் சங்கிலி.

"நீங்க இருப்பிங்கனு பார்த்தன். ஆள காணும். அதான் உங்க பொண்ணுட்ட விஷயத்த சொன்னன்."

"நான் தான் சொல்லிட்டன்ல உங்ககிட்ட. ஒரு மாசத்துக்குள்ள கொடுக்குறன்னு."

சங்கிலியின் குரல் கரகரத்தது. போலிஸ் காரனிடம் பேசுவது போல் பம்மிக்கொண்டு தான் பேசினான். கொஞ்சம் குரலை உசத்தினாலும், மகளின் வாழ்க்கை பறிபோய் விடுமோ என்கிற பயம்.

"அதெல்லாம் சரி தான். இங்க பணம் அர்ஜென்டா தேவப்படுது. அதான் வீட்டுக்கு வந்து சொல்ல வேண்டியதாச்சு."

"சரிங்க, அப்போ நான் இன்னும் பத்து பதினைஞ்சு நாளுக்குள்ள கொடுத்தர்றன்."

"சட்டுனு கொடுத்த நல்லா இருக்கும். உங்க பொண்ணு தான வச்சி வாழ போகுது. நாங்களா?"

"... வீட்டுல யாரும் இல்லிங்கல. தம்பி எங்க காணும்"

"எல்லாரும் நந்திவனம் திருவிசாவுக்கு போயிருக்காங்க. நேத்து ராவுல தான் கெளம்புனாங்க. வர ரெண்டு நாளாகும்."

"ஓ அப்பிடியா! அதான் தம்பிய காணுமோ? தம்பிய பாத்துட்டு போலாம்னு வந்தேன். சரி அப்போ நான் வரங்க. இன்னொரு நாளைக்கு வந்து பாக்குறன்."

"ம். போயிட்டு வாங்க" என்றார் ஜோதியின் மாமா.

சரியான வயிற்று பசி. இரவும் சரியாக சாப்பிடவில்லை. சைக்கிள் மிதிக்க மிதிக்க, பசியால் வியர்க்க ஆரம்பித்தது. 'டீ குடித்துவிட்டு போகலாமே' என்பது போல் வயிறு பிதற்றியது. சைக்கிளை நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டுவிட்டு டீக்கடைக்குள் நுழைந்தார் சங்கிலி.

டீ சொல்லிவிட்டு திரும்புகையில் தான் தனது பால்ய வயது நண்பன் முருகையாவை பார்த்தார். இருவரும் ஒருவர் ஒருவரை பார்த்து புன்னகைத்து கொண்டனர். சிறு வயது முதலே, இருவரும் ஒன்றாக சுற்றி திருந்தார்கள். பள்ளி காலத்திலேயே, இவர்கள் செய்யாத ரகளை இல்லை. காலம் என்னும் கருவி தான் இவர்களையெல்லாம் பிரித்து வைத்திருக்கிறது.

"என்னடா, மக எப்படி இருக்கா? பேரப் பிள்ளைங்களா எப்படி இருக்காங்க" என்றான் முருகையா.

"எல்லாம் நல்லா இருக்காங்க டா. சம்மந்தி வீட்டுக்கு போயிட்டு வந்தேன் டா."



சங்கிலி முருகையாவிடம் எந்த விஷயத்தையும் மறைப்பதில்லை. முருகையாவும் அப்படிதான். சங்கிலி நடந்ததையெல்லாம் சொன்னார். ‘இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா’ என்று முருகையாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சங்கிலி பணம் புரட்ட வழி கேட்டான்.

“அம்மங்குடி ராமசாமிட்ட போயி கேட்டா கிடைக்கும்டா. அவரு தான் இப்போ வட்டிக்கு பணம் கொடுக்குறாரு. சொந்தமா கால அறுக்குறன்னு சொன்னா கண்டிப்பா தருவாரு.”

“எப்புடி டா அவ்வளவு உறுதியா சொல்ற?”

“நீ கேளுடா அவர்கிட்ட. கண்டிப்பா உனக்கு தருவாரு. ஆனா பணம் மட்டும் சொன்ன தேதிக்குள்ள திருப்பி கொடுத்துடனும். இல்லனா, பெரிய தகராறு பண்ணிப்புடுவான்”

இருவரும் டீ குடித்தனர். முருகையா சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்பிவிட்டார்.

சங்கிலி இன்னொரு டீ குடித்து விட்டு, சைக்கிளில் அம்மங்குடி சாலை யில் வந்துகொண்டு இருந்த போது ஜோதியின் கணவன் ஒரு பெண்ணுடன் சைக்கிளில் போய்கொண்டு இருந்தான். ஏதேச்சையாய் நோட்டமிட்ட சங்கிலி சைக்கிளை அவர்கள் முன் நிறுத்தினார். அவன் அருகில் சென்று கன்னத்தில் ஓங்கீ அறைந்தார். அவன் எதுவும் பேசவில்லை.சங்கிலியும் எதுவும் பேசவில்லை. கோபத்தோடு வீட்டுக்கு சென்றார் சங்கிலி. ■



உலகத்தை என்னால்
எட்டிப்பார்க்க முடிகிறது
உள்ளங்கையில்
ஸ்மார்ட்ஃபோன்.

- தமிழமின்



# பாரதி தாசனைப் பாடு

( ஒரு விகற்ப நேரிசை வெண்பா )



1.

ஆரங்கள் கோர்த்ததாய்ச் சாரம் நிறைத்தளித்துப்
பாரங்கள் தீர்த்திடும் பாவாலே - தீரமாய்ச்
சாரங்கள் கட்டிச் சரியாக் கவிகட்டும்
பாரதி தாசனைப் பாடு.

2.

பாரத கண்டத்தில் பாட்டுடைப் பாவலன்
பாரது போற்றிய பாங்குடன் - சீரது
ஓரத்து ஏழையையும் ஒய்யாரத் தேரேற்றும்
பாரதி தாசனைப் பாடு.

3.

வீரத் தமிழனென வேந்தன் இராவணனை
சூரன் அவனெனச் சூத்திரமாய் - யாரவன்
பாரதத் தாயவளின் பந்தம் அவனென்ற
பாரதி தாசனைப் பாடு.

4.

பாராட்டும் வார்த்தைகளால் பாடி இயற்கையினைச்
சீராட்டும் செம்மொழியில் சீர்த்தநல் - நீராட்டும்
நீரலையாய் வார்த்தை நிலவழகைப் பாடிடும்
பாரதி தாசனைப் பாடு.

**- கு. கமலசரஸ்வதி**

# உண்மை வாழுமிடம்

## பொதியன் செல்வம்

அய்யாபுரம் - தென்காசி

ஆறுமுகம் தமிழ்நாட்டின் பல பெரிய மாநகரங்களிலும் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற அரசு அதிகாரி. எங்கெங்கு இரை தேடி பறந்தாலும் முடிவில் தான் வசிக்கும் கூட்டிற்கு வந்து இளைப்பாறும் வானம்பாடி பறவைகளைப் போல், மனித மனம் தான் பிறந்த சொந்த மண்ணிலேயே கடைசி காலங்களை களிக்க நினைக்கும். ஆறுமுகம் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? இயற்கை எழில் கொஞ்சும் எப்போதும் தென்றல் காற்று வீசும் தென்மாவட்டத்திலுள்ள தன் கிராமத்திற்கு சென்று உறவுக்காரவர்களுடன் ஒன்றாய் கூடி மகிழ்ந்து விவசாயத்தையும் பார்த்துக் கொண்டு தன் கடைசிகாலத்தை செலவிட வேண்டுமென்ற ஆசையை மனைவி கோமள வல்லியிடம் கூற அவளும் அதையே எதிர்பார்த்தது போல முகம் மலர்கிறாள். நீங்கள் சொல்வது சரிதான்.

இத்தனை வருடங்கள் பிறந்த மண்ணையும் சொந்த பந்தங்களையும் விட்டு நாடோடியாக வாழ்ந்த வாழ்க்கை போதும். நாம் கவலைபட்டுக்கொண்டு இருந்த நமது ஒரே மகளின் திருமணமும் எந்தவித பிரச்சனையும் இடர்பாடுகளும் இல்லாமல் நன்றாக முடிந்து விட்டதால்.

இனி கிராமத்திற்கு செல்வதில் தடை யில்லை என்று பேசி முடிவெடுத்த இரண்டாம் நாளில் அடுப்பங்கரையில் சமையல் செய்து கொண்டிருந்த மனைவி மயங்கி சரிகிறாள். உடனே ஆம்புலன்ஸ் துணையுடன் அவசர அவசரமாக சென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு பின் மாரடைப்பால் காலமாகிறாள். ஆறுமுகத்தின் இதயம் ஒரு நொடி துடிக்க மறந்து பின் வேகமாக



துடிக்கிறது. தன்னை ஆசுவாசப் படுத்தி விட்டு அன்பையும், பாசத்தையும், நல்லொழுக்கத்தையும் கொஞ்சமும் குறை வின்றி ஊட்டி வளர்த்து இப்போது வெளிநாட்டில் கணவரோடு நல்ல பணியிலிருக்கும் தன் ஒரே மகளான செல்வியை அலைபேசியில் அழைத்து அம்மாவின் இறப்பை தெரிவித்துவிட்டு இறுதிச் சடங்குகளை கிராமத்தில் செய்யப்போவதாக சொல்கிறார். மகளும் உடனே கிளம்பி கிராமத்திற்கு வந்து விடுவதாக சொல்ல தன் கிராமத்து உறவினர்களுக்கும் தகவல் சொல்ல அவர்களும் நல்லடக்கத்திற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

மனைவியின் பிரேதம் கெடாமல் இருக்க மருத்துவமனையில் பேக் செய்து தந்த ப்ரீஷர் பாக்சோடு ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு தனியொரு ஆளாக, எத்தனை நட்புக்கள் நகரத்தில் கிடைத் திருந்தாலும், உடன் வந்து இரண்டு நாட்கள் கூடவே இருந்து இறுதிச் சடங்கை முடித்து திரும்பும் அளவிற்கு அவர்களுக்கு நேரமில்லாத காரணத்தால், சோகங்களைப் பரிமாறாமல் அவர் தனக்குள் வைத்துக்கொண்டு தனியாக புறப்படுகிறார். தன் சொந்த கிராமத்துக்கு ஆமாம் நகரத்தில் எந்த மனிதனிடமும் பிற உறவுகளுக்கோ நண்பர்களுக்கோ செலவழிக்க அவர்களிடம் நேரம் இல்லை. நகரம் என்பது ஆயிரம் உண்மைகள் ஒளிந்து இருக்கும் இடம். அது எப்போதும் வெளிப்படுவதில்லை. யாரும் யார் மனதும் புண்படும் படியாக பேசுவதில்லை ஆமாம். உண்மை பேசினால் தானே மனித மனம் வருத்தம் அடையும்.

ஏழு மணி நேரம் பயணம் செய்தால் எட்டிவிடும் தொலைவில் இருக்கும் கிராமம் நோக்கி நகர்கிறது ஊர்தி.

இருள்சூழ் நேரம் மூடப்பட்ட வாகனத்தில் வெளி இரைச்சல் காதுகளுக்கு கேட்கவில்லை. கடமையே கண்ணாக கண் சிமிட்டாமல் ஓட்டும் ஓட்டுனர் இது போன்ற எத்தனை மரணங்களை பார்த்து இருப்பார்.

கணத்திற்கும் மனைவியின் சடலத்தை பார்க்க பார்க்க குளமாகிய கண்கள். அப்படியே கடந்த காலங்களை புரட்டி பார்க்க செல்ல , இயற்கை எழில் கொஞ்சும் என் கிராமத்திலிருக்கும் பச்சை பசேல் என்ற வயல்வெளிகள், விளையாடித் திரிந்த வரப்புகள், கம்மாய்கள், கிணறுகள், பம்புசெட்டு குளியல், சொர்க்கலோகமாய் நினைவுகளில் வந்து போகிறது. பெற்றோருக்கு ஒரே மகன் என்பதால் செல்லம் எனக்கு அதிகம். மகன் நன்றாக படித்து பெரிய பதவிக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில் எதிலுமே குறைவின்றி நகரத்து விடுதியில் தங்க வைத்து படிக்க வைத்தார்கள். விடுமுறை நாட்கள் மட்டுமே கிராமம் செல்வதுண்டு. நானும் அவர்களின் ஆசையையும் விருப்பத்தையும் நிறைவேற்றும்படி நல்லமுறையில் படித்து முடித்து உடனே வேளாண்மைத்துறையில் அதிகாரியாக பணியில் சேர்ந்தேன்.

ஊரெல்லாம் இருக்கும் விவசாயிகள் என் ஆலோசனையின் பேரில் நிலங்களை பாதுகாக்க ஒருநாளும் எங்க சொந்த நிலம் பற்றி நினைத்துப் பார்த்ததில்லை. இப்போது நினைத்தால் வருத்தம் மனதை வதைக்கிறது. பணியில் சேர்ந்த உடன் திருமணம் செய்ய ஏற்பாடு செய்த பெற்றோர் மனைவியை பெண் பார்க்க அழைத்துப் போனார்கள். அவளும் பக்கத்து ஊர் கிராமம் தான் நிலபுலம் நிறைய வைத்து அந்த பகுதியிலேயே பெரிய கோடீஸ்வரராக இருந்தவரின் செல்ல மகள்தான் இவள். எங்கள் வீட்டில் நிறைய நிலபுலன்கள் இருந்ததாலும் அவர்களுக்கு இணையில்லை என்பதே உண்மை, நான் அதிகாரியாக பணியாற்றி யதாலும், பக்கத்து கிராமம் என்பதாலும் நிறைய விசாரிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு தேவைப்படவில்லை.

ஒரு சில நிபந்தனையோடு திருமணத்திற்கு சம்மதித்தனர். ஆம் தன் மகள் எந்த கவலையும் இன்றி வசதியாக வாழ்ந்ததால் வேண்டியதை எங்களிடம் கேட்டு வாங்கி கொள்ளுங்கள் அவளை கஷ்டம் தெரியாமல் பார்த்து கொள்ளுங்கள் என்பதில் தொடங்கி நகரத்தில் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் என்பதில் போய் முடிந்தது.

இவருடைய பெற்றோர் ஆசையோ ஒரே பையன் நம்முடன் இருக்க முடியாத நிலையில் வேலை அமைந்ததால் அவன் மனைவி குழந்தைகளாவது தன்னுடன் இருக்க வேண்டும் என்பது.

வசதியான குடும்பத்திலிருந்து பெண் எடுக்கிறோம் அவள் திறந்த வெளி கழிப்பிடங்களுக் கெல்லாம் பழக்கப் பட்டவள் இல்லை மேலும் சுகாதாரமானதாகவும் இருக்காது, இரவு நேர அவசரத்திற்கு சிரமமாகவும் இருக்கும் அதனால் வீட்டில் கழிவறை ஒன்று கட்டிடலாம் மணப்பெண்ணின் பெற்றோரும் அதையே சொல்கின்றனர் என்று சொல்லி முடிப்பதற்குள், இவ்வளவு படிச்சிருக்க கொஞ்சமாவது அறிவு இருக்கா வீடு என்பது கோவில், கோவிலில் யாராவது இந்த மாதிரி அசிங்கமா கக்கூஸ் கட்டுவாங்களா என்று வசைபாடினார். சரி வீட்டிற்கு வெளியிலாவது கட்டுவோம் என்று சொன்னதற்கு அதற்கும் முடியாது ஊரில் காலைக் கடன்களை முடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட கொல்லையில தான் பயன்படுத்தனும் என்று கண்டிப்புடன் சொல்லிவிட வேறு வழியின்றி அந்த முயற்சி கைவிடப்பட்டது

உண்மை தான் கிராமங்களில் பெரும் பாலும் கழிவறை உள்ள வீடுகள் அவசியம் இல்லாமல் போனது இயல்பு தான்

காரணம். அனைவரும் வயல்காட்டில் வேலை செய்பவர்கள் வேலை முடிந்து ஆறு குளங்களில் குளியல் முடித்து வருபவர்கள் காலை கடன்களையும் அவர்கள்

# தன்முனை

## கவிதைகள்

●

புரிந்தும் புரியாதது
போல் இருக்கிறாய்
சொல்லாமல் காதல்
தடுமாறிப் போகிறது.

●

நம்மில் வேறுபாடு
என்பதே இல்லை
மனது ஒன்றுபட
துடித்து தவிக்குது..

●

நிலவை எல்லோரும்
அழகு என்கிறார்கள்
உன்னை கண்டபின்
நிலவும் பொய்யானது.

●

பாம்பின் பயம்
அற்றுப் போனது
கொரானா பயம்
தொற்றிக் கொண்டது.

●

நிறுத்தம் இல்லாது
தொடர்ந்து போகிறது
ஏக்கக் கனவுகளோடு
வாழ்க்கைப் பயணம்.

●

கைகூப்பி வணக்கம்
காதலருக்கும் இனிக்கும்
கொரானாவின் பயம்
பண்பாடு இனி சிறக்கும்.

●

மகிழ்ச்சி மனதை
மகிழ்வாக்கித் தரும்
கோபம் குணத்தையே
கொன்று போடும்.

**வா. சண்முகம்**

கொல்லை புறங்களில் கழித்து விடுவதால் அவர்களுக்கு தேவைப்படவில்லை வீட்டில் கழிவறை.

இதற்கிடையிலும் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நடந்தேறியது. பல்வேறு ஊர்களுக்கு மாறுதலாகும் அரசு பணி மற்றும் முதல் நிலை அதிகாரியாக இருந்ததால் செல்லுமிடங்களிலெல்லாம் அங்கேயே சகல வசதிகளுடன் குவார்டர்ஸ் தந்து விடுவார்கள்.

எனவே சொந்த ஊர் ஞாபகம் வரவில்லை வரும் போது இயலவில்லை விளைவு, இதுவரை கிராமத்திற்கு இரண்டு முறை மட்டுமே வந்திருக்கிறார் அதுவும் தான் மட்டுமே தாய் தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கு கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்திற்காக.

ஒரு சுயநலவாதியாக கழிவறை இல்லாத ஒரே காரணத்தைக் காட்டி பெற்றோரை பிரிந்து வாழ்ந்து பிறகு காலத்தின் கட்டாயத்தாலும் கிராமத்து பக்கமே வர இயலாமல் போனது. நல்ல ஒரு வாழ்க்கையைத் தேடித்தந்து பல ஏக்கர் நிலங்களை சொத்தாக சேர்த்து வைத்து சென்ற என் பெற்றோர்களுக்கு நான் மகனாக இருந்து செய்தது என்ன. பல முறை மனைவியின் ஊருக்கு வந்த போதும் கூட தாய் தந்தையரை பார்க்காமல் சென்றதை நினைத்து வெட்கப் படுகிறேன். பெற்ற தாய் தந்தையரை பார்க்ககூட நான் வராமல் இருந்ததை நினைத்து பார்க்கும் போது எனக்கே அசிங்கமாக இருக்கிறது. தாய் தந்தை மறைவுக்கு பின் கழிவறை வசதி செய்து விட்டுத்தான் அங்கு வர முடிவு செய்தோம் அதன் படி எல்லாம் சிறப்பாக நடைபெற்றது ,

எண்ண ஓட்டங்கள் நிற்கவில்லை வாகனம் நின்றது என் வீட்டின் அருகில் வந்து சேரும் போது அதிகாலை 4.00 மணி ஊரே தூங்காமல் பச்சத் தண்ணீர் கூட குடிக்காமல் என் வீட்டின் முன் காத்து கிடக்கிறது. இது தான் கிராமம் ஒருவருக்கு ஒன்று என்றால் ஊரே கூடி வந்து உறுதுணையாக இருக்கும்.

ஆம்புலன்ஸ் ஓட்டுனருக்கு பணத்தை செட்டில் செய்ததும் மனைவியின் உடல் நடுவீட்டில் கிடத்தப்படுகிறது. ஊரார் ஒன்று கூடி செய்ய வேண்டிய சாங்கல்யங்களை கிராமத்து வழக்கப்படி செய்கிறார்கள். அதில் அங்கிருந்த பாட்டிமார்கள் பலரும் ஒப்பாரி வைக்க சிலர் என் கையைப் பிடித்து கலங்கிய கண்களோடு ஆறுதல் சொல்கிறார்கள். நேற்று முழுதும் சிந்திய கண்ணீரால் என் கண்களில் கண்ணீர் வற்றிப் போயிருந்தது அவர்களுக்கு நான் ஆறுதல் சொல்லிக் கொண்டு மரணம் நடந்த நிகழ்வை விளக்கிக் கொண்டிருந்தேன்.

மாலை 4 மணியளவில் மகள் தன் கணவனுடன் காரில் வந்து இறங்கி அப்பாவை கட்டியணைத்து அழுகிறாள். அப்போது அங்கு ஒரே சலசலப்பு , 60 வயதான என் காதுகளிலேயே அவ் வார்த்தை விழ, இளவயதிலிருக்கும் என் மகளுக்கு கேட்காமல் இருக்குமா, சலசலப்பு குறையும் முன்னே இவ தான் நீ தத்தெடுத்து வளர்த்த பொண்ணா என்று ஒரு வயதான அம்மா கேட்கஆமாம் என்று தலையாட்டி விட்டு மகளை பார்க்கிறார் அ ந்த நொடியில் இருவரும் சிலையாகி வார்த்தைகள் வராமல் நிற்கிறார்கள். எந்த ஒரு ரகசியம் தன் மகளுக்கு தெரிய கூடாது என்று நானும் என் மனைவியும் பொத்தி பொத்தி வைத்தோமோ அது இன்று தெரிந்து விட்டதே இத்தனை வருடங்கள் இந்த கிராமத்து பக்கம் வராமல் இருந்ததன் நோக்கம் வீணாகிவிட்டதே எப்படி என் மகளை சமாதானம் செய்வேன், பொய் பேசக் கூடாது என்று சொல்லி வளர்த்த நானே இவ்வளவு பெரிய பொய் சொல்லி விட்டேனே, இதற்காக தானே கிராமத்திற்கு இவ்வளவு நாள் வராமல் இருந்தோம், தன் மகளுக்கு விவரத்தை

சொன்னால் புரிந்து கொள்வாளா மாட்டாளா என்று எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, இறுதிச் சடங்கு வேலைகள் ஆரம்பித்து மயானம் சென்று வந்த பின் ஒவ்வொருவராக அவரவர் வீடுகளுக்கு கிளப்புகிறார்கள். மகள் தன் அப்பாவின் மடியில் படுத்து தேம்பித் தேம்பி அழுகிறாள் அவர்கள் சொன்னது உண்மையா என்று கேட்க தன் மகளை ஆறுதலாக தட்டிக் கொடுக்கிறார்.

நீங்க என் கூட வெளிநாடு வந்து விடுங்கள் அப்பா நாம எல்லோரும் சேர்ந்து இருக்கலாம் தனியாக இருந்து கஷ்டப்பட வேண்டாம் கொஞ்சம் கூட நாகரீகம் இல்லா மக்கள் எந்த நேரத்தில் எது பேசுவது என இங்கிதம் தெரியாதவர்கள் என்று கோபப்படுகிறாள்.

மகளே உண்மையை உன்னிடம் மறைத்தது என் தவறு அதற்கு இந்த மக்கள் மீது பழி சொல்லாதே. இரவில் உன் அம்மா உடலை எடுத்துக் கொண்டு நான் புறப்பட்ட நேரம் முதல் கண்ணில் தூக்கமின்றி காத்திருந்த தெய்வங்கள் இவர்கள். பிறருக்கு ஒரு துன்பம் என்றால் அதை பகிர்ந்து கொள்ள ஓடோடி வரும் உத்தமர்கள் இந்த கிராமத்து மக்கள். மேல் மாடியில் இருப்பவர் வீட்டில் ஒரு துக்கம் என்றாலும் கீழே உள்ளவர் வேலைக்கு செல்லும் நகரம் இல்லை இது.

கிராமத்து மக்கள் எதார்த்தவாதிகள் மனதில் எதையும் வைத்துக்கொண்டு பொய் பேச மாட்டார்கள் வெள்ளந்தியானவர்கள் அவர்கள் உண்மையைத்தானே பேசினார்கள். இத்தனை வருடங்களாக நான் என்னுடைய எதார்த்த தன்மையை இழந்து வாழ்ந்து விட்டேன் இனியேனும் கிராமத்தினரோடு சேர்ந்து என்தாய் தந்தை நினைவுகளையும் உன் அம்மாவின் கனவையும் நிறைவேற்ற இங்கேயே இருக்கிறேன்.

இன்றைக்கு இருக்குற விஞ்ஞான வளர்ச்சியில நேரில் பேசுன மாதிரியே நாம வீடியோ கால் பேசலாம் பார்த்துக்கலாம். நீயும் விடுமுறை வரும் போது இயந்திர உலகை விட்டு அமைதியான சூழலில் வந்து தங்கி அப்பாவையும் பார்த்து விட்டு செல் என்று சொல்ல பதில் சொல்ல தெரியா பச்சிளங்குழந்தையாக அங்கிருந்து விடைபெற்று செல்கிறாள் மகள்.



# அட இது என்ன கவிதை?

கொஞ்சும் கிளியின் குணமே கொண்டாள்
அஞ்சும் சிறுமயில் அழகை உண்டாள்
மஞ்சள் முகத்தில் நிலவின் பொலிவு
பிஞ்சு மனத்தில் மலையின் வலிவு

காந்தள் விரல்கள் கவர்ந்தே அழைக்கும்
சாந்தம் தவழ்ந்தே சந்ததி பிழைக்கும்
வேந்தன் வலிமை வீணென் றாகும்
ஏந்தும் அழகில் எல்லாம் சாகும்

பாதக் கொலுசொலி பங்கம் விளைக்கும்
மோத வருமழகில் முகக்கண்தொலைக்கும்
நாத வடிவாகி நர்த்தனம் ஆடும்
கீதம் ஒன்றாகி கிங்கிணி பாடும்

பின்னே பார்த்தால் பொற்கரம் துடிக்கும்
தன்னால்சுகம்வர தலைக்கனம் வெடிக்கும்
இன்னல் தொலைக்க இன்முகம் சிரிக்கும்
பின்னல் சடைதனில் புதுமலர் விரிக்கும்

நாசி அழகினில் எள்ளுப்பூ வசிக்கும்
பேசிக் கவர்ந்திட பிதற்றலும் ருசிக்கும்
வீசி எறிவதும் விழுதென மாறும்
மாசிப் பனியென மார்பினில் ஏறும்

பித்தம் வந்தெனைப் பிடித்தே ஆட்டும்
சித்தம் கவர்ந்திட அழகினைக் கூட்டும்
நித்தம் அவளது நினைவுகள் வாட்டும்
தத்தம் கவிதையாய்த் தனிவழி தீட்டும்



**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# நேரிசை வெண்பா

அன்போடு கொண்டாடு ஆள்வோமே தன்னகத்தே
இன்பமோடு வாழ்ந்திடுவோம் ஈவோமே – துன்பமேயில்
இன்னலேபோம் நாட்டிலேயும் இன்றோடு தொல்லையேயில்
இன்னுயிரும் போற்றுவோமே ஈந்து!!!

அன்னம் பயில்வதோ அன்னநடை நன்நளினம்
மன்னிய நீரோடை மூழ்கியெழும் – மின்நளினம்
மீன்குஞ்சு துள்ளியே மேலுயர நோக்கினில்
அன்பே நளினம் அணிந்து!!!

அன்பும் பரிவும்தான் அன்னையின் பாசமும்
நன்பொருள் நல்கிட நாடுவதும் – அன்புதான்
மன்னும் உலகினில் மாந்தரின் நேசமும்
அன்பிலே என்ப தறிந்து!!!

நகமும் சதையொடு நட்புமே பாரில்
புகழும் உயர்வும் பலமே – யுகத்தில்
மலரினில் நாறும் மணக்கிறதே மன்னும்
நலமே விளைந்திட நட்பு!

குயில்கள் இணைந்து மேகூவுமிசை இன்பம்
மயில்களும் ஆடும் மகிழ்ந்து – பயின்றிட
அன்னங்கள் நீந்தும் அணியுமே இன்பமும்
இன்னல்கள் நீக்கும் இனித்து !!!

மயிலன்ன பேரெழிலோ மங்கையும் என்தன்
உயிரனைய உன்விழியில் ஒன்றாய்ப் – பயின்ற
மையலும் கவர்காந்த மான்விழிப் பார்வை
தையலுந்தன் காதல் தவழ்ந்து!!!

**இரா. மீனாட்சி சுந்தரம்**
கோவை



பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com ஜுலை 2020

# உடைத்தெறி உயர்வாய் நீ

பாவலர் கருமலைத்தமிழாழன்

சாதிகளின் கட்டுகளை உடைத்தெ றிந்தால்
சமத்துவப்பூ மலர்ந்துமணம் வீசு மிங்கே
ஆதிக்க சாத்திரத்தை உடைத்தெ றிந்தால்
அனைவருக்கும் சமூகநீதி கிடைக்கு மிங்கே!
வீதிமுனை கடவுளரை உடைத்தெ றிந்தால்
விதியோடு பழம்மூடம் விலகு மிங்கே
ஊதிவைத்த மதமனுவை உடைத்தெ றிந்தால்
உதித்துவிடும் மனிதநேயம் பிரிவு மாயும்!

சூழ்ச்சிகளை சுயநலத்தை உடைத்தெ றிந்தால்
சூழ்ந்தனைவர் ஒன்றாகி உறவாய் ஆவார்
ஊழ்வினையாம் எனும்கருத்தை உடைத்தெ றிந்தால்
ஊக்கமுடன் வினையாற்ற வழிகள் தோன்றும்!
ஆழ்த்துகின்ற வைதிகத்தை உடைத்தெ றிந்தால்
அறிவொளிதாம் பாய்ந்துவாழ்வில் வளர்ச்சி தோன்றும்
வீழ்த்துகின்ற பொய்புராணம் உடைத்தெ றிந்தால்
வீறுகொண்ட புத்துலகம் பூக்கு மிங்கே!

இந்துத்வா மாயையினை உடைத்தெ றிந்தால்
இருள்கிழித்தே இனமானம் நிமிர்ந்து நிற்கும்
நிந்திக்கும் தலையெழுத்தை உடைத்தெ றிந்தால்
நிறைமானத் தன்மானம் நெஞ்சில் தோன்றும்!
முந்தும்ஆணா திக்கத்தை உடைத்தெ றிந்தால்
முளைவிட்டே பெண்ணுரிமை நிலம்பி எக்கும்